பக்கங்கள்-16 01,கார்த்திகை.2020 விலை-30.00




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -319

## 20வது திருத்தத்தின் மூலமாக சிங்கள பேரினவாதம் சாதிக்க நினைத்தது என்ன?

## 3ஆம் உலகமகா யுத்தத்தின் பாதையாக மாறுமா இலங்கை?

## கொரோனாவின் 2ஆம் அலையும் கோட்டபாய ராஜபக்ஷவும்



-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-



# 20 ஆவது திருத்தத்தின் மூலமாகசிங்கள பேரினவாதிகள் சாதிக்க நினைப்பது என்ன?

**சுழியோடி**

பெரும் சர்ச்சைகளுடன் நோக்கப்பட்ட அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டு விட்டது. எதிர்க் கட்சியைச் சேர்ந்த எட்டுப் பேரின் ஆதரவு கிடைத்ததால் 156 வாக்குகளைப் பெற்று, திருத்தம் நடைமுறைக்கு வந்திருக்கின்றது. கட்சிகளின் ஏழு உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்காவிட்டிருந்தால், அரசாங்கத்தின் நிலைப்பாடு தடுமாற்றமானதாகவே இருந்திருக்கும். ஆக, இந்த தனிச் சிங்கள - பௌத்த அரசாங்கத்தைப் பாதுகாப்பதில் சிறுபான்மையினக் கட்சிகளும் தமது பங்களிப்பை வழங்கியுள்ளன. ஆனால், இதன் மூலம் அவர்களுக்கு என்ன கிடைக்கப் போகின்றது?

ஜெயவர்த்தன புதிய அரசியலமைப்பை 1978இல் கொண்டுவந்த போதுதான், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஜெயவர்த்தன அதிகாரங்கள் அனைத்தையும் தன்னிடம் குவித்துக்கொள்வதை இலக்காகக் கொண்டே இந்த புதிய அரசியலமைப்பைக் கொண்டுவந்தார். அதன் மூலமாக தன்னை ஒரு சர்வாதிகாரியின் நிலைக்கு அவர் உயர்த்தினார். இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த ஜெயவர்த்தன, 1989இல் அரசியலிலிருந்து ஓய்வு பெற்ற போது, மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியாக விரும்பியிருந்தாலும், நாட்டில் காணப்பட்ட கொதி நிலையால், கட்சித் தலைமையை பிரேமதாசவிடம் கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டார்.

வடக்கு கிழக்கில் இந்தியப் படைகள் நிலைகொண்டிருந்தமையும், தெற்கின் பல பகுதிகள் ஜே.வி.பி.யின் கட்டுப்பாட்டில் இருந்தமையும் ஜெயவர்த்தன ஒதுங்கிக் கொண்டமைக்குக் காரணமாகச் சொல்லலாம். ஆனால், பிரேமதாஸ இந்த இரண்டு பிரச்சினைகளையும் சமாளிப்பதற்கு அவருக்கு இருந்த நிறைவேற்று அதிகாரம் காரணமாக இருந்தது என்பது உண்மையாக இருக்கலாம். பிரேமதாஸவும் ஒரு சர்வாதிகாரியாகவே ஆட்சி நடத்தினார். கட்சிக்குள்ளும், வெளியேயிருந்தும் வரக்கூடிய எதிர்ப்புக்களை முறியடிப்பதற்கு தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தினார்.

சந்திரிகா சொன்னது ஜனாதிபதியிடம் இருக்கக்கூடிய சர்வாதிகாரம் நாட்டு மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்த நிலையில்தான் 1994இல் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதித் தேர்தலில் குதித்தார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழிப்பது என்பது அவரது பிரதான வாக்குறுதியாக இருந்த போதிலும், அவர் அதனைச் செய்யவில்லை.

விடுதலைப்புலிகளுடனான போரை மீண்டும் ஆரம்பித்த அவர், நிறைவேற்று அதிகாரத்தை நியாயப்படுத்திக்கொண்டே, மேலும் ஒரு தவணைக்கு ஜனாதிபதிப் பதவியை வகித்தார். இறுதியில், 2005இல் ஜனாதிபதி ஒருவர் மூன்றாவது தவணைக்கும் பதவி வகிக்கலாம் என்ற மாற்றத்தைக் கொண்டுவர அவர் முற்பட்ட போதிலும், மகிந்த ராஜபக்ஷவின் கடுமையான அழுத்தங்களால் அதனைச் செய்ய முடியவில்லை.

2005இல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழிப்பது என்ற வாக்குறுதியுடனேயே மகிந்தவும் தேர்தலில் போட்டியிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றினார். ஆனால், அதிகாரத்தைச் சுவைத்த அவரால் அதனை மாற்ற முடியவில்லை. ஏற்கனவே இருந்த நிறைவேற்று அதிகாரங்களை மேலும் பலப்படுத்தும் வகையில்தான் 18 ஆவது திருத்தத்தை அவர் கொண்டு வந்தார்.

ஜனாதிபதி ஒருவர் மூன்று தவணைக்குப் பதவி வகிக்கலாம் என்பதும், பாராளுமன்றத்தை அதன் ஒரு வருட பதவிக்காலத்திலேயே கலைக்கலாம் என்பதும் இந்த 18ஆவது திருத்தத்தில் முக்கியமானவை. இதன் மூலம் தொடர்ச்சியாக அதிகாரத்தில் இருக்க முடியும் என அவர் நம்பினார். ஆனால், ராஜபக்ஷக்களில் அதிருப்தியடைந்திருந்த மைத்திரிபால சிறிசேனவை கட்சியிலிருந்து வெளியே எடுத்து ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கியதன் மூலம், மகிந்தவின் இந்தத் திட்டத்தை சந்திரிகா - ரணில் இணைந்து சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவுடன் முறியடித்தனர்.

19 ஆவது திருத்தம் ராஜபக்ஷக்கள் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதைத் தடுப்பதை இலக்காக வைத்துத்தான் 19 ஆவது திருத்தம் மைத்திரி - ரணிலால் கொண்டுவரப்பட்டது. ஜனாதிபதியின் பதவிக்காலம் இரண்டு தவணை மட்டும்தான் எனக் குறிப்பிடப்பட்டிருந்தமை மகிந்தவைக் கட்டிப்போட்டது. இரட்டைப் பிரஜாவுரிமை கோட்டாவையும், பசிலையும் இலக்காகக் கொண்டு கொண்டுவரப்பட்ட போதிலும், கோட்டா அந்தத் தடையைத் தாண்டினார். எப்படியிருந்தாலும், 19 ஆவது திருத்தம்தான் கோட்டா ஜனாதிபதியாக வழிவகுத்தது. இல்லையெனில் மகிந்தவே மீண்டும் ஜனாதிபதியாகியிருப்பார்.

2015 ஆட்சி மாற்றமும், 19 ஆவது திருத்தமும் ராஜபக்ஷக்களைத் தோற்கடிக்கும் ஒரேயோர் இலக்கை மட்டுமே கொண்டிருந்தது. 19ஆவது திருத்தச் சட்டமானது, ராஜபக்ஷக்கள் எதிர்காலத்தில் கூட, அதிகாரத்திற்கு வந்து விடக் கூடாது என்னும் நோக்கில் கொண்டுவரப்பட்டது. இலங்கையில் ஜனநாயகத்தை பலப்படுத்தும் நோக்கில் இது முன்னெடுக்கப்பட்டதாக கூறப்பட்டாலும் கூட, அடிப்படையில் ராஜபக்ஷ குடும்பமே இலக்கு வைக்கப்பட்டது. ஆனால், இன்று அனைத்தும் தலைகீழாகிவிட்டது.

ராஜபக்ஷக்களை அகற்றுவதற்கு திட்டம் தீட்டியவர்கள், இன்று கோட்டாபய ராஜபக்ஷவை பெருமபான்மை ஆதரவுடன் அரியணையில் அமர்த்தியிருக்கின்றனர். ஒருவர் ஜனாதிபதி, பிறிதொருவர் பிரதமர், மற்றொரு சகோதரர் பாதுகாப்பு அமைச்சர் என்னும் நிலை உருவாகியிருக்கின்றது. இனி பசிலும் பாராளுமன்றம் வந்து அமைச்சராகலாம். அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்காக போடப்பட்ட திட்டங்கள் அனைத்தும், இறுதியில் ராஜபக்ஷக்களை முன்னரைவிடவும் பலமான நிலையில் மீளவும் அதிகாரத்திலல்லவா அமர்த்தியிருக்கின்றது.

அடுத்தது என்ன? **அடுத்து வரவுள்ள ஐந்து வருடங்களுக்கு இலங்கையின் தலைவிதியை ராஜபக்ஷக்களே தீர்மானிக்கவுள்ளனர். சில சமயம் அது 10, 15 வருடங்களுக்கும் தொடரலாம். எதிர்க்கட்சிகளின் பலத்திலேயே அது தங்கியிருக்கின்றது.** அதற்கான வலுவான அடித்தளத்தை அவர்கள் போட்டுவிட்டனர். இனி எவர் விரும்பினாலும் இதை மாற்றியமைக்க முடியாது என்பதே உண்மை. சிறுபான்மையனக் கட்சிகளான முஸ்லிம் கட்சிகளின் ஆறு பிரதிநிதிகள் இப்போது அரசின் பக்கம் தாவிவிட்டார்கள். அதனால், அரசு மீதான நெருக்கடிகள் குறையலாம்.

கோட்டாபய அரசாங்கம் சர்வதேச உறவுகளை எவ்வாறு கையாளப்போகின்றது. என்பதைகண்டு, இலங்கை மீதான தலையீடுகள் இடம்பெறும். குறிப்பாக விவகாரத்தைக் கையாள்வதற்கான சில உபாயங்களை அவர்கள் யையாளலாம். தொடரும் கொரோனா தொற்றும், அதனால் உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடிகளும் அவர்களுக்கு உதவாலாம். ஆக ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் உருவாகக்கூடிய நெருக்கடிகளை சமாளித்து பலமான ஒரு சர்வதிகார ஆட்சியைத் தொடர்வதற்கான வாய்ப்பு 20வது திருத்தத்தின் மூலம் ராஜபக்ஷக்களுக்கு கிடைத்துள்ளது.



தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## இலங்கைக்கான அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோவின் வருகை ஆபத்தானது

அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோவினது வருகையானது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. காரணம் இந்தியா, சீனா இரு நாடுகளும் இலங்கை மீது தனது ஆதிக்கத்தை செலுத்திக்கொண்டிருக்கின்ற இந்த காலகட்டத்தில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோவினது வருகையானது சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்கு பெரும் நெருக்கடியை கொடுப்பதாகவே அமையப்பெறுகிறது. பூகோள ரீதியாக ஆசிய, ஐரோப்பிய நாடுகள் எதிர்கொண்டுள்ள கொரோனா வைரஸினுடைய தாக்கத்தை அடுத்து பொருளாதார ரீதியில் நாடுகள் பின்னடைவை சந்தித்துள்ளது. இந்த நிலைப்பாட்டில் தனது சர்வாதிகாரத்தை ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் செலுத்துவதற்காக அமெரிக்கா, சீனா, இந்தியா நாடுகள் தீவிரமாக இலங்கையிலும் தனது காலை பதித்துள்ளது. போட்டி அரசியல் என்பது ஒருபுறமிருக்க நாடுகளை தனது ஆக்கிரமிப்புக்குள் கொண்டுவருவதற்கான முன் நடவடிக்கையாகவே இதனை காண முடிகிறது. போட்டி போட்டுக்கொண்டு இலங்கைக்கு உதவிகளை வழங்குவதாக ஒருபுறத்தில் காட்டிக்கொண்டு கடல், வான், தரைபோன்றவற்றைதமதுகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு அமெரிக்கா, சீனா, இந்தியா அரசு முற்படுகிறது.

குறிப்பாகசீனாவினுடையநிலைப்பாடுஎன்பது தனது சிற்றரசை உருவாக்குவதற்கான நடவடிக்கையாகவே கொழும்பு துறைமுகம், அம்பாந்தோட்டை விமானநிலையம், தாமரை தடாகம் போன்றவற்றை தன்வசப்படுத்தியுள்ளது. இந்த நாட்டில் தனது கம்னிஸ்சிய வாதத்தை விதைப்பதற்காகவே சீனா பாரியளவில் செயற்படுகிறது. இது தொடர்பாக இந்தியாவினுடைய வெளி விவகார அமைச்சரும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோவும் சீனாவினுடைய இலங்கையின் ஆதிக்கம் குறித்து தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். சீனா மிகவும் இராஜதந்திரமாக தனது கம்னிஸ்சியவாதத்தால் இந்த நாட்டை பிரிக்க முற்படுகிறது. பௌத்த மேலாதிக்க சிந்தனையை இந்த நாட்டில் விதைக்க முற்படுகிறது.

ஆகவே இதற்கான முடிவுகளை அல்லது சீனாவை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் இதுவரையில் ஆராய்ந்திருக்கிறார்கள். அப்படி வெளியேற்றியிருந்தால் அமெரிக்கா இந்தியாவிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது போடப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தை இரு நாடுகளும் நீக்குமாக இருந்தால் இலங்கை அரசானது ஆட்டங்காணும் நிலை ஏற்படும். காரணம் என்னவென்றால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வடகிழக்கு இருந்த காலகட்டத்தில் அந்திய நாடுகளினுடைய ஆதிக்கம் கடல் மார்க்கமாகவோ, தரை மார்க்கமாகவோ இருந்ததில்லை.

ஆகவே இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் சீனாவை இலங்கையிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு இராஜதந்திர ரீதியாக தமிழீழ விடுதலைப்புலிகளை மீள் எழிச்சி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்ற நிலைப்பாட்டிலே அமெரிக்க இராஜாங்க அமைச்சரின் வருகை அவதானிக்கப்படுகின்றது.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**123**

4. மருத்துவச் சேவை

கெரில்லாக்கள் அடிக்கடி மிகக் கடினமான நிலைமைக்குள்ளாகின்றனர். அதுவும் குறிப்பாக, நெருக்கடியான சூழ்நிலையை கெரில்லா நேரடியாகச் சந்திக்கும் போதாகும். இது அதிகமாகக் கெரில்லா காயமடைந்துள்ள நிலைமை அல்லது நோய்வாய்ப்பட்டுள்ள நிலைமை போன்ற சந்தர்ப்பங்களிலாகும். ஆகவே தான் கெரில்லாப் படைப்பிரிவில் மருத்துவரின் பங்கு பிரதானமாகின்றது. கெரில்லாப் போரின் போது வீரர்களுக்குச் சகல வகையான மருத்துவ உதவியை மாத்திரம் மருத்துவர் வழங்குவதில்லை. அவசியமான சமயங்களில் அவர்களின் உயிரைக் காக்கப் போராடவும் செய்கின்றான்.

அவனிடம் இருக்கின்ற பொருட்கள் போதுமானதாக இல்லையென்றாலும் அவன் தனது வருகையால் நோயாளிகளுக்கு உளரீதியாக ஆதரவளிக்கின்றான். சாத்தியமான அளவு நோயாளியின் வேதனையைக் குறைக்க முயற்சிக்கின்றான். காயமடைந்தவன் நலம் பெறும்வரை மருத்துவன் அவனைவிட்டு அகலமாட்டான். கெரில்லாப் படைப்பிரிவுகளின் வளர்ச்சித்தரத்தைப் பொறுத்து மருத்துவமனைகளின் பணி ஒழுங்கமைப்புக்கள் தீர்மானிக்கப்படுகின்றன. வளர்ச்சித் தரத்தை அடிப்படையாகக் கொண்டு மருத்துவமனை ஒழுங்கமைப்புக்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. கெரில்லா அமைப்பின் முதலாவது கட்டத்தில் மிகவும் பிரசித்தி வாய்ந்தமையாக மருத்துவமனைகள் திகழ்கின்றன. இக்கட்டத்தில் மருத்துவன் இருப்பானானால் அவன் தனது தோழர்களைப் போன்று சம-வுரிமையுடன் படைப்பிரிவின் வாழ்வில் பங்கெடுத்துக்கொள்கின்றான்.

உண்மையில் அவன் கெரில்லா செய்கின்றதைப் போன்ற அதே பணிகளை இடையிடையே செய்கின்ற இன்னுமொரு வீரனாவான். சகல கெரில்லாக்களைப்போல அவன் சண்டைக்குச் செல்கின்றான். ஆனால் .தனுடன் சேர்த்து அவன் கடினமான சில சமயங்களில் அவசியமான பொருட்கள் எதுவுமற்ற நிலையில் விழுப்புண்ணடைந்த வீரனின் உயிரைக் காக்கின்றதும் முழுக்க முழுக்க நம்பிக்கையற்றதுமான பணியையும் நிறைவேற்றுகின்றான். .க்கட்டத்தில் கெரில்லா இராணுவத்தில் மருத்துவன் மிக முக்கியமான பணியைச் செய்கின்றான்.

கெரில்லா படைப்பிரிவில் மருத்துவர் இருப்பதன் உயரொழுக்க முக்கியத்துவத்தைக் குறிப்பிடுவதானால் வீரர்கள் மருத்துவரை இடையிடையே அவர்களுக்கு ஆறுதலைத் தருகின்ற உண்மையான புனித தந்தையாகக் காண்கின்றார்கள். வலியால் துடித்துக்கொண்டிருக்கும் மனிதனுக்கு அவனது வேதனையைப் புரிந்த அவனது துன்பத்தில் பங்கெடுக்கின்ற நண்பனொருவனின் கையால் கிடைக்கும் சாதாரண அஸ்பிரின் குளிகை கூடிய பலனைத் தருகின்றது. போரின் ஆரம்பக்கட்டத்தில் பங்கெடுக்கின்ற மருத்துவன் நம்பிக்கையான புரட்சிகரச் சிந்தனை கொண்ட மனிதனாக இருக்க வேண்டும். ஏனெனில் அவனது போதனை மிக .லகுவாகக் கெரில்லாக்களால் புரிந்துகொள்ளப்படுகின்றது.




கெரில்லாப் போரின் சாதாரண வளர்ச்சியில் அடுத்த கட்டம் தோற்றம் பெறுகின்றது. .தனை நாங்கள் 'அரைநிலையான' கட்டம் என அழைக்கலாம். இக்காலகட்டத்தில் கெரில்லாக்கள் தங்கியிருப்பதற்கான முகாம்களும் தங்கங்களும் இருக்கின்றன. அத்துடன் வெவ்வேறு பொருட்களைச் சேமித்து வைக்கக்கூடிய காயமடைந்த தோழர்களைத் தங்கவைக்கக்கூடிய நம்பிக்கையான நண்பர்களின் வீடுகளும் இருக்கின்றன. இக்கட்டத்தில் ஒவ்வொரு தடவையும் வெளிப்படையாக அலைந்து திரியும் வாழ்க்கை நிலைக்கு மாறும் போக்கை அவதானிக்கலாம்.

இப்போது மருத்துவனுக்குச் சிரமம் குறைந்த பணியே இருக்கும். அவனது பொருட்பையில் பணியாற்றுவதற்கான மிக இன்றியமையாத அறுவைச்சிகிச்சை உபகரணங்களே.ருக்கும். ஆனால் மேலதிக பொருட்கள் உபகரணங்ள் போன்றன யாவும் ஏதாவதொரு நட்புரிமை கொண்ட குடும்பமொன்றின் வீட்டில் காணப்படும். இவை யாவும் மிக அமைதியான சூழலில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்கு மருத்துவனுக்குத் தேவைப்படுவனவாகும். நோயாளர்களையும் காயமடைந்தவர்களையும் பராமரிப்பதைக் குடியானவர்களிடம் கையளிக்கலாம். அவர்கள் இதனை மிகத் திறம்படச் செய்வார்கள். அரைநிலையான போராட்ட வளர்ச்சிக் கட்டம் மருந்துப் பொருட்களைச் சேமித்து வைக்கக்கூடிய இடங்களில் அவற்றைக் கூடியளவில் வைத்திருக்க உதவுகின்றது. இம்மருந்துப் பொருட்களை இயலுமானவரையில் அவதானமாகக் கையாளவேண்டும். பூரணமாகச் செயற்படச் சாத்தியமற்ற பிரதேசத்தில் பணிநடைபெற வேண்டுமானால் குடியானவர்களின் வீடுகளில் இடைக்கால மற்றும் நிலையான மருத்துவமனைகளை உருவாக்கலாம். மூன்றாவது கட்டத்தில், அதாவது எதிரியிடமிருந்து விடுவிக்கப்பட்ட பல பிரதேசங்கள் தோன்றும் பொழுது மருத்துவமனை வலையமைப்பை உருவாக்கலாம்.

இச்சூழ்நிலையில் தனது பரிபூரணத்தில் இந்த வலையமைப்பு மூன்று வெவ்வேறு வகையான பிரிவுகளைக் கொண்டதாக இருக்கலாம். இந்நிலையில் முன்னணி வரிசையில் மருத்துவப் போராளி அவசியமாகும். இவன் நேரடியாகச் சமரில் பங்குபற்றும் ஆவல் கொண்டவனாவான் இந்நிலைமையில் அவன் உயர் சிறப்புத் தேர்ச்சிமிக்க நிபுணனாக இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. முன்னணி வரிசையில் காயமடைந்தவனின் அல்லது நோயாளியின் வலியைக் குறைப்பதும் அவனுக்கு முதலுதவி வழங்குவதும் மாத்திரமே முக்கியமாகும். உண்மையான வைத்தியம் பின்புலத்திலமைந்துள்ள மருத்துவமனையில் இயல்புகளையும் ஆராய்வதற்கான நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட நிலையான மருத்துவமனைகள் வாழ்க்கை ஆரம்பமாகின்றது. முன்னணி வரிசையில் அனுபவம் வாய்ந்த அறுவைச் சிகிச்சையாளனை நிறுத்தி அவனது உயிரோடு விளையாடக்கூடாது. சூழ்நிலை இடந்தருமானால் மருத்துவர்கள் காயமடைந்தவனைக் காவுபடுக்கையில் கிடத்தி மருத்துவநிலைக்கு அனுப்புவார்கள். மருத்துவர்கள் இல்லாதவிடத்து இப்பணியைச் சக கெரில்லாத் தோழர்கள் நிறைவேற்றுவார்கள். சமதரையற்ற பிரதேசத்தினூடாகக் காயமடைந்தவனைக் கொண்டுசெல்லும் போது. அவதானமாகவும் எச்சரிக்கையாகவும் கொண்டுசெல்ல வேண்டும். கெரில்லாக்களைப் பொறுத்தவரையில் இது இலகுவான காரியமல்ல. இதன் போது இப்பணிக்காக இப்பணிக்காகக் கூடியளவு வீரர்கள் தமது பிரதான பணியை விடவேண்டியேற்படுகின்றது. எனும் விடயத்தையும் கருத்திலெடுக்க வேண்டும்.

பிரதேசத்தின் இயல்புக்கமைய காயமடைந்தவனை வெவ்வேறு வழிவகைகளில் கொண்டுசெல்லலாம். குறிப்பிட வேண்டிய விடயம் யாதெனில் கெரில்லாப் போரிற்கு வசதியான மலைப்பாங்கான பிரதேசத்தில் ஒவ்வொருவராக நகர்வதே மிகவும் வசதியாகும். இவ்வாறான நகர்வின் போது மிகவும் பரிந்துரைக்கப்படுகின்ற காயமடைந்தவனைக் காவிச்செல்கின்ற வழிவகையாக ஆதாரத்திற்காக நீண்ட தடியைப் பயன்படுத்தி அதன் உதவியுடன் காவிச்செல்வதையே நாங்கள் கருதுகின்றோம். நீண்ட தடியில் காமாக் தொங்கவிடப்பட்டு அதனுள் காயமடைந்தவன் கிடத்தப்படுவான். இவ்வாறான முன்னேற்பாடற்ற காவுபடுக்கையை முன்புறத்தில் ஒருவனும் பின்புறத்தில் மற்றையவனுமாக .ரண்டு கெரில்லாக்கள் காவிச்செல்வார்கள்.

அவர்கள் களைப்படைந்ததும் ஏனைய இரு தோழர்களிடம் காவுபடுக்கை பரிமாறப்படுகின்றது. மருத்துவ நிலையிலிருந்து காயமடைந்தவன் அவனது நோய்நிலைப் பரிசோதனைத் தகவல்களுடன் மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றான்.

**தொடர்வான்...**

**நெற்றிப்பொறியன்**

# கொரோனா 2ஆம் அலையும் கோட்டபாய ராஜபக்சவும்

தாயத்தான்



சீனாவில் 2019 டிசம்பர் மாதமளவில் உருவான கொரோனா என்னும் கொடிய வைரஸ் உலகம் முழுவதையும் புரட்டிப்போட்டது. அது இலங்கையையும் விட்டுவைக்கவில்லை. 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி இறுதிப்பகுதியில் கொரோனா வைரஸ் இலங்கையை தாக்கத் தொடங்கியது. உடனடியாக இலங்கை முழுவதும் முடக்கப்பட்டு நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மிக இறுக்கமான நடைமுறையினால் உலக வல்லரசுகள் சிக்கி சின்னா பின்னமான நிலையிலும் மிக காத்திரமான நடவடிக்கையிலும் ஜனாதிபதி கோட்டபாய அவர்களின் மிக வேகமான செயற்பாட்டினாலும் எமது நாட்டில் முதலாவது கொரோனா அலையின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டு சுமார் மூன்று மாதகால அளவில் 2500 பேர் மாத்திரம் பாதிக்கப்பட்டும் 12 பேர் உயிரிழந்தும் காணப்பட்டனர். உலக நாடுகளே வியக்கும் வண்ணம் கொரோனாவை கட்டுப்படுத்தி உயிரிழப்புகளில் குறைந்த நாடுகள் வரிசையில் முதலிடத்தில் இலங்கை காணப்பட்டது.

இந்நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் இறுதிப்பகுதியில் மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. அதிலிருந்து மிக வேகமாக பரவி கொரோனா வைரஸ் தனது இரண்டாவது ஆட்டத்தை தொடங்கியது.

மினுவங்கொட முதல் கொத்தணியாக உருவெடுத்து சுமார் 4000 பேருக்கு மேல் கொரோனா என்னும் கொடிய வைரஸால் பாதிப்படைந்த நிலையில் அதனுடன் இணைந்த மற்றொரு கொத்தணி உருவானது. அது பேலியகொட மீன் சந்தை வியாபாரி ஒருவருக்கு கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து இரண்டாவது மிகப்பெரிய கொத்தணியாக உருமாறி நாட்டின் பல பகுதிகளிலும் கொரோனா நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். இதனையடுத்து அப்பிரதேசங்கள் மட்டும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மொத்தமாக இலங்கை முழுவதும் இப்பத்தி எழுதும் வரை 177 பொலிஸ் பிரிவுகளுக்கு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை இப்பத்திஎழுதும்வரை 10640ஆகஉள்ளது. உயிரிழப்புக்களும் 20ஆக உள்ளது. முற்றாக நாட்டை முடக்க சொல்லி சுகாதார தொற்றியல் பிரிவு அரசாங்கத்தை கடுமையாக கேட்ட பொழுதிலும் நாடு முழுவதுமாக முடக்கப்படும்பட்சத்தில் மக்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஏனெனில் கடந்த மார்ச் மாதம் கொரோனா முதலாவது அலையினால் நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு சுமார் இரண்டு மாத காலமாக முடக்கப்பட்டதால் அன்றாடம் கூலித்தொழிலாளிகள் முதல் பாரிய நிறுவனவனங்களை நடாத்தும் மல்ரி பில்லியன் வரை கடும் பாதிப்புகளை சந்தித்தனர்.



முடக்க நிலை முடிவுக்கு வந்ததன் பின்னர் பொருளாதார நிலையை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவர மக்கள் மிகவும் கடும் பிரயத்தனத்தை மேற்கொண்டனர் மெதுவாக பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வரும் நிலையில் கொரோனா 2ஆம் அலை தொடங்கி மீண்டும் நாடு முடக்கப்படுமானால் அது மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். அத்துடன் பலகோடி பில்லியன் பொருளாதார இழப்பை நாடும் சந்திக்கும் இந்நிலையில் நோய் தொற்றிலிருந்து மக்களையும் பாதுகாத்து அதேவேளை பொருளாதார நெருக்கடியையும் ஒருங்கே சமாளிக்க வேண்டிய நிலையில் நாடு இப்பொழுது நாட்டை முழு அடைப்புக்குள் வைக்க வேண்டிய அவசியம் தற்பொழுதுவரை ஏற்படவில்லையென பிரதமரும் கொரோனாசெயலணித்தலைவர்சவேந்திர சில்வா அவர்களும் தெரிவித்துள்ளனர். கொத்தணி அலையாக உள்ள கொரோனா இன்னும் சமூக பரவலை அடையவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. உண்மையில் உள்ளது. ஏற்கனவே 30 வருடகால இனமோதல்களால் நாடு பாரிய பின்னடைவை சந்தித்துள்ள நிலையில் மீண்டும் கொரோனா தாக்கத்தால் நாடு அதாள பாதாளத்துக்குள் செல்வதை தடுக்க அரசு கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளது. கம்பஹா மினுவாங்கொடை கொத்தணியில் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்ட உடனேயே அம்மாவட்டப் போக்குவரத்துக்கு முற்றாக தடைசெய்யப்பட்டது போல் மாவட்டங்களுக்கிடையேயான போக்குவரத்தை தடுத்திருத்தல் அவசியமானது ஆனால் இதை அரசு செய்யத் தவறிவிட்டது என்றே கூறலாம். மாவட்டங்களுக்கு இடையே போக்குவரத்து இடம்பெற்றதால் நோய்க்காவிகளாக போக்குவரத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அரசு இப்பொழுது கூட இந்த மாவட்டங்களுக்கிடையேயான போக்குவரத்தை முற்றாக தடுக்கவில்லை. கொரோனா முதலாவது அலையில் கோட்டபாய அரசு எடுத்த அதிரடி நடவடிக்கைகள் இப்பொழுது ஏன் எடுக்கவில்லை? இதில் ஓர் அசமந்தபோக்கு காணப்படுவதாக எதிர்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

கொரோனா இரண்டாம் அலை தொடங்கிய அதே நேரத்தில் 19ஆம் திருத்தச்சட்டம் நீக்கப்பட்டு 20ஆம் திருத்தச்சட்டம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டது. இச்சூழ்நிலையில் கொரோனா தாக்கம் பற்றிய பிரச்சனை பெரியளவில் தோன்றவில்லையோ என எண்ணத்தோன்றுகின்றது. எமது நாட்டில் கொரோனா தொற்று விஸ்வரூபமெடுத்த நிலையில் எமது நாட்டை மையப்படுத்தி உலக வல்லரசுகள் காய் நகர்த்தி வருகின்றன. தமது பிராந்திய நலன்களுக்காக எமது நாட்டின் அப்பாவி உயிர்கள் மீது அவர்கள் தங்கள் சுயநல ஆட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கொரோனா தோற்றத்துக்கு முக்கிய காரணமான சீனா தனது பொருளாதார இராணுவ கட்டமைப்புகளில் முன்னிலை பெற நிர்க்கதியாகி நிற்கும் இலங்கையை தமது விளையாட்டு மைதானமாக மாற்ற முயற்சிக்கின்றது. சீனாவின் இலங்கை மீதான தாக்கம் அமெரிக்காவை எவ்வளவு விசனமடைய வைத்துள்ளது என்பதை அமெரிக்க வெளியுறவு செயலாளர் மைக்பொம்பியோ அதிரடி பயணம் காட்டுகின்றது. அது எவ்வாறெனில் இப்பொழுது கொரோனா இரண்டாம் அலை தொடங்கி கோரத்தாண்டவம் ஆடும் நிலையில் அதனையும் பொருட்படுத்தாமல் கொரோனா நோய் தொற்று பற்றி கவலைப்படாமல் இலங்கை இந்தியா மாலைதீவு போன்ற நாடுகளுக்கு அவர் விஜயம் மேற்கொண்டுள்ளமை மிக அவதானமாக நோக்க வேண்டிய விஜயமாகும். அண்மைக்காலமாக இலங்கை சீனர் அதிக நட்புறவு இதனை முறியடிக்கவும் சீனா மீது ஓர் மறை முக எச்சரிக்கையை விடுமுகமாகவும் இலங்கை பயணம் எடுத்து காட்டுகின்றது. அமெரிக்காவிலும் கொரோனா வைரஸால் பல இலட்சம் மக்கள் உயிரிழந்த நிலையில் அத்துடன் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்று வரும் நிலையிலும் இராஜாங்க செயலரின் பயணம் எவ்வளவு தூரம் முக்கியமானது என்பதை புரிந்து கொள்ளலாம் இந்தியாவும் சீனா இலங்கையின் அதீத உறவால் வெறுப்படைந்துள்ளது. அண்மைக்காலமாக சீனா இந்தியா உறவில் பலத்த விரிசல்களுக்கு போட்டி பிரச்சனைகளும் காணப்படுகின்றமை அறிந்ததே.

இந்நிலையில் கோட்டபாய அரசு இம் மும்முனை சிக்கலில் இருந்து எவ்வாறு மீளப்போகின்றது என்பதே இங்குள்ள கேள்வியாகும். அமெரிக்கா சீனா இந்தியா வல்லரசுகளில் பிராந்திய சுயநலம் 20ஆம் திருத்தச்சட்ட நிலை கொரோனா வைரஸ் என மூன்று சவால்கள் அவர் முன் உள்ளன. மற்ற இரண்டையும்விட கொரோனா வைரசானது மக்கள் உயிர் சம்மந்தப்பட்ட விடயம் ஜனாதிபதி கோட்டபாய அவர்கள் முதலில் கொரோனா வைரஸை கட்டுப்படுத்தல் நடவடிக்கையில் தீவிரமாக செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது. அத்துடன் மக்களும் இந்நோயில் இருந்து தங்களை தாங்களே பாதுகாப்பதில் உறுதியாக இருக்க வேண்டும். சுகாதாரப் பிரிவினர் கொடுக்கும் எச்சரிக்கைகளை அசட்டை பண்ணாமல் தங்களை தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டும். பொதுமக்கள் அநாவசியமாக வெளியில் நடமாடுவதை முடிந்தளவு குறைத்துக்கொள்ள வேண்டும் முடிந்தளவு பொதுப் போக்குவரத்தில் பயணங்களில் ஈடுபடுவதை தவிர்த்தல் முகக் கவசங்களை கட்டாயம் அணிதல் போன்ற விடயங்களில் மக்கள் ஈடுபடுதல் அவசியமாகின்றது.

இனமத பேதமின்றி இந்த கொரோனா வைரஸிலிருந்து தங்களையும் பாதுகாத்து நாட்டையும் பாதுகாக்கப்போம் என்பது காலத்தின் தேவையாகும்.

# மூன்றாம் உலக யுத்தத்தின் பாதையாக மாறுமா இலங்கை?



முதலாம் இரண்டாம் உலக மகா யுத்தங்களுக்கும் அழிவுகளுக்கும் எப்படி ஜேர்மனி முக்கிய காரணமாகவும் காரணியாகவும் இருந்ததோ அது போல் உலகம் முழுவதும் எதிர்பார்க்கப்பட்டு இருக்கும் மூன்றாம் உலக மகா யுத்தத்தின் பாதையாக அடிகோலியாக இலங்கை அமையப் போகின்றதா? என்ற அச்சம் தற்பொழுது ஏற்படத்தொடங்கியுள்ளது. இலங்கை உலகில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாக காணப்படுகின்றது. அத்துடன் இயற்கை துறைமுகம் அது தன்னகத்தே கொண்டுள்ளது. உலகின் பல வல்லரசு நாடுகளை கடல் வழியாக கண்காணிக்கும் வல்லமை கொண்ட இடத்தில் அது அமைந்துள்ளது. 2ஆம் உலக மகா யுத்தத்தின் பின்னர் பிரித்தானியாவின் ஆட்சியில் இருந்து இலங்கை விடுபட்டதன் பின்னர் மறைமுகமாக இந்திய வல்லரசின் பிடிக்குள் இலங்கை காணப்பட்டது. அதற்கு காரணம் இலங்கை இந்தியாவிற்கு மிக அருகில் உள்ளமை, கச்சத்தீவு பிரச்சனை என இருந்தபொழுதிலும் இந்தியா பட்டும் படாமலும் ஒரு பார்வையாளர் எனும் வரையறைக்குள் இருந்தது. 1970க்கு பின்னர் இலங்கையில் ஏற்பட்ட இன மோதல்களின் பின்னர் இந்தியாவின் இலங்கை மீதான நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு பார்வையாளர் மட்டத்தில் இருந்து ஆக்கிரமிப்பு மற்றும் சிற்றரசாக்கும் எண்ணத்தில் 1985க்கு பிற்பகுதியில் செயற்பட்டது. அக்காலகட்டங்களில் இலங்கையில் ஆட்சி செய்தது ஐக்கிய தேசியக் கட்சியாகும்.

ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தனா தொடக்கம் ரணில் விக்ரமசிங்க வரை அமெரிக்க சார்பு நிலையையே கொண்டு இருந்தனர். அக்காலத்தில் இடம்பெற்ற ஓர் சம்பவம் 1987ஆம் ஆண்டு அமைதிப்படை என வந்த இந்திய இராணுவத்தை ஜனாதிபதி பதவியை எடுத்தவுடனேயே ஆர். பிரேமதாச அவர்கள் இந்தியா அமைதிப்படையை திருப்பிச் செல்லுமாறு பணித்தார். 1978ஆம் ஆண்டு தொடக்கம் 1995 ஆண்டு வரை இந்தியாவை கனம்பண்ணாமல் அமெரிக்கா பக்கம் இலங்கையின் இராஜதந்திர கொள்கை வியாபித்து இருந்தது என்பது உண்மையே. 1995க்கு பின்னர் அப்பொழுது இலங்கையில் விடுதலைப்புலிகள் அமைப்பானது மிகப்பலம் பொருந்திய அமைப்பாகவும் பல கட்டமைப்புகளை கொண்டதுடன் வடகிழக்கு பிரதேசங்களில் பல பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

இந்நிலையில் இலங்கையில் ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்கா அம்மையார் அவர்கள் இலங்கை சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர். அவர் இந்தியாவையும் அமெரிக்காவையும் ஒருங்கே சமாளித்துக் கொண்டு தனது ஆட்சியை செயற்படுத்தினார். அதாவது இருநாட்டு வெளியுறவுக் கொள்கைகளில் மென்போக்கு தனத்தை கையாண்டார். அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த மகிந்த ராஜபக்ச அவர்களும்இக்கொள்கைஅடிப்படையிலேயே பயணித்ததோடு இன்னொரு வல்லரசுடனும் தனது வெளியுறவுக் கொள்கை ரீதியாக கைகோர்த்தார். அது சீனாவாகும். முன்பிருந்த ஜனாதிபதிகள் இரண்டு வல்லரசுகளுடன் சமாளித்து பயணித்த நிலையில் மகிந்த ராஜபக்ச அவர்கள் மூன்று வல்லரசுகளுடன் பயணிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் இதில் மகிந்த ராஜபக்ச அவர்கள் மிகப் புத்திசாலித்தனமாகவும் தனது அரசியல் முதிர்ச்சியால் மூன்று வல்லரசுகளையும் இராஜதந்திர வியூகத்துக்குள் வீழ்த்தி தனது நாட்டை பிரிக்க நினைத்தவர்களும் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக போராடிக்கொண்டிருந்த விடுதலைப்புலிகளையும் அதனுடன் அப்பாவி தமிழ் மக்களையும் இறுதி போரில் இம்மூன்று வல்லரசுகளின் உதவியுடன் அவ் வல்லரசுகளின் எடுபிடி நாடுகளான பிரிட்டன், இஸ்ரேல், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உதவியுடன் முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைத்தனர். இறுதிப்போர் முடிவடைந்ததன் பின்னர் இலங்கை நாட்டினை அபிவிருத்தி செய்வதாக கூறி மூன்று வல்லரசுகளும் தமக்குள் போட்டி போட்டுக்கொண்டு இலங்கையில் கால்பதித்தனர். அவர்கள் தங்களின் பிராந்திய சுயநலனுக்காக இலங்கையை பயன்படுத்த தொடங்கினர். அபிவிருத்தி என்னும் போர்வையிலும் வேலைத்தளங்களை உருவாக்கி வேலைவாய்ப்பினை வழங்கல் என்ற போர்வையிலும் இலங்கையின் நிலப்பகுதிகளை 100 வருட குத்தகைக்கு எடுத்துள்ளன. இதில் சீனா முன்னிலையில் உள்ளது இது இலங்கை நிலவரம்.



இனிநாம் இவ் வல்லரசுளின் பிராந்திய நிலவரங்களை சற்று கவனிப்போமாக இருந்தால் சீனாவில் உதயமான கொரோனா வைரஸிலும் உலகின் முன்னணி வல்லரசான அமெரிக்கா, இந்தியா கொரோனா வால் பாரியளவில் பதிக்கப்பட்டுள்ளனர் தனது மறைமுக சிற்றரசான இலங்கையை பாதுகாத்தது மட்டுமல்லாமல் பலகோடி பில்லியன் கொரோனா மீட்பு என நிதியேன அளித்துள்ளது. அத்துடன் சீனா கடந்த சில காலமாக இந்தியா எல்லையை மீறி தாக்குதல்கள் நடத்துவதுடன் பல நவீன ஏவுகனைகளையும் பரீட்சித்து வருகின்றது. அத்துடன் இராணுவ ரீதியாக பெரும் வளர்ச்சியை பெற்றுள்ளதுடன் பொருளாதார ரீதியாகவும் தன்னை நிலைப்படுத்தியுள்ளது. இந்நிலையில் அமெரிக்காவின் பரம எதிரியான வடகொரியாவுடன் தனது மென்மையான ராஜதந்திர நிலையை கொண்டுள்ளது. அத்துடன் சீனா தனது நாட்டின் ஒரு பிராந்தியமென எண்ணும் தாய்வான் நாட்டை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க சீனா விரும்புகின்றது. ஒருபுறம் இந்தியா எல்லையில் தனது நிலையை விஸ்தரிக்கும் முயற்சி மறுபக்கம் தாய்வானை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சி இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் முயற்சி என சீனா எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளால் வெகுண்டெழுந்த அமெரிக்கா தனது ஆட்டத்தை தற்பொழுது ஆரம்பித்துள்ளது. அதன் முதல் கட்டமாக தாய்வான் அரசுக்கு பலகோடி பில்லியன் பெறுமதியான ஆயுதங்களை வழங்கியுள்ளது. அத்துடன் தனது நாட்டின் வெளியுறவு செயலாளரை கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்துள்ள இந்தியா இலங்கை நாட்டுக்கு அனுப்பி சீனாவை எச்சரிக்கை செய்கின்றது. இலங்கைக்கு வந்த அமெரிக்கா வெளியுறவு செயலாளர் மைக் பொம்பியோ கடுமையாக சீனாவை சாடியுள்ளார். சீனா இலங்கைக்கு இடையேயான ஒப்பந்தங்களை கூட கிண்டலடித்துள்ளார். நண்பனா வந்துள்ளேன் என ஸ்ரீலங்கா அரசுக்கு கூறியுள்ள மைக் பொம்பியோ இராணுவத் தளபதி சவேந்திர சில்வாமீது அமெரிக்கா விதித்துள்ள பயணத் தடையை நீக்க மாட்டோம் என்று கண்டிப்பாக கூறி இலங்கையையும் மிரட்டிவிட்டு சென்றுள்ளனர். அதாவது சீனாவுடன் உள்ள உறவினை இலங்கை விலக்கிக்கொள்ளும் பட்சத்தில் சவேந்திர சில்வாவின் பயணத்தடை நீக்க வாய்ப்பு உள்ளது போல் காட்டி சென்றுள்ளார்.

இந்தியாவும் தனது பங்குக்கு இலங்கை சீனா உறவில் இலங்கைக்கு ஓர் மறைமுக அழுத்தம் கொடுக்கும் விதமாக அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை காணொளி மூலம் தொடர்பு கொண்டு பேசுவதற்கு ஆர்வம் வெளியிட்டு இருந்தமையும் அமெரிக்க வெளியுறவு செயலாளர் இலங்கைக்கு வந்துசென்ற அதேசமயத்தில் இலங்கைக்கான இந்தியத்தூதுவர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களை தனது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அழைத்து பேசியுள்ளமையானது மிகவும் உண்ணிப்பாக கவனிக்க வேண்டிய விடயமாகின்றது. இச் சந்திப்பின் பின்னர் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் தெரிவித்த விடயம் யாதெனில் பேச்சுவார்தை ஆரோக்கியமாகவும் பயனுள்ளதாகவும் இருந்ததாகவும் இந்தியா முதலீட்டாளர்கள்வடகிழக்கில்முதலீடுசெய்ய ஆர்வமாக உள்ளதாகவும் அதனை தமிழ் மக்களின் பிரதிநிதிகளான கூட்டமைப்புடன் இணைந்து செயற்படவிரும்புவதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன் 13ஆம் திருத்தச்சட்டம் தொடர்பாகவும் தற்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ள 20ஆம் திருத்தச்சட்டம் தொடர்பான தமதுநிலைப்பாட்டை விளக்கமாக தூதுவரிடம் கூறியுள்ளதாகவும் திரு. சம்பந்தன் அவர்கள் கூறியுள்ளார். இந்நிலையானது இலங்கை அரசுக்கு மிகப்பெரும் நெருக்கடியை இரு நாடுகளும் கொடுத்துள்ளதாக தெரிகின்றது. சீனாவை விட்டு விலகுவதா அல்லது அமெரிக்கா இந்தியாவுடன் முட்டி மோதுவதா என இலங்கை தினறிவருகின்றது. இந்நிலை தொடருமானால் இலங்கையில் பலகோடி பில்லியன் பொருளாதார மையங்களை அமைத்துள்ள சீனா அதை பாதுகாக்க இலங்கையில் தனது படையை நிறுத்தும் காலம் வெகுதூரம் இல்லை. இந்தியாவும் 1987 இல் இந்தியா அமைதிப்படை விவகாரத்தில் ஏற்பட்ட அவமானத்தை நீக்க இலங்கையில் தனது படை வல்லமையை காட்ட முயற்சிக்கும் அமெரிக்காவும் இந்தியாவுக்கும் உதவுவது போல் இலங்கையில் தரை இறங்கலாம்.

சீனாவுக்கு உதவியாக வடகொரியா மற்றும் அமெரிக்கா எதிர் அரபு நாடுகளும் ரஷ்யாவும் களமிறங்கலாம். அமெரிக்காவுக்கு சார்பாக பிரான்ஸ் களமிறங்கும்பொழுது அண்மையில் பிரான்ஸ் முஸ்லிம் மதம் சார்பாக வெளியிட்ட கருத்தால் பிரான்ஸ் ஆசிரியை ஒருவர் ஐஎஸ் ஐஎஸ் தீவிரவாதிகளால் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதை அடுத்து பிரான்ஸ் ஐஎஸ் ஐஎஸ் தீவிரவாதிகளை அழிக்கும் முக்கிய நாடாக தன்னை பிரகடனப்படுத்தியுள்ளது. இதற்கு லிபியா மற்றும் சில அரபு நாடுகள் பிரான்ஸ் நாட்டின் உற்பத்தியாகும் பொருட்களை தமது நாட்டில் விற்கதடை செய்துள்ளமையானது பிரான்ஸ்சை இன்னும் சீற்றமடைய வைத்துள்ளது. இந்நிலையில் போர் முழுமானல் அமெரிக்காவுக்கு உதவியாக பிரான்ஸ் களமிறங்கும் பட்சத்தில் லிபியா மற்றும் அரபு நாடுகள் சீனாவுக்கு ஆதரவாக களமிறங்கும். இது மிகப்பெரும் கோர யுத்தமாக முடிவடையும். இந்த மூன்றாம் உலக மகா யுத்தத்தின் தொடக்க புள்ளியாக எமது இலங்கை நாடு இருக்கப்போகின்றது என நடக்கும் சம்பவங்கள் எதிர்வு கூறுகின்றன. முதலாம்இரண்டாம்உலகயுத்தத்தின்வடுக்கள் இன்னும் கூட ஆறவில்லை. இனியொரு யுத்தம் தேவையில்லை. உலக வல்லரசுகளே உங்களின் பிராந்திய போட்டிகளை விட்டு அப்பாவி மக்களின் உயிர்களுடன் விளையாடாமல் மக்கள் நலன்சார் ஆட்சியினை நடத்துங்கள் என உலகில் உள்ள அனைத்து இன, மத, மொழி கடந்த மக்களின் வேண்டுதல் ஆகும். சிந்தியுங்கள் செயற்படுங்கள்.

விமல்



# இன்றைக்கு 24 வருடங்களின் முன் - மறக்கமுடியாத யாழ் மக்களின் இடப்பெயர்வு

அன்று கந்தசஷ்டி விரதத்தின் கடைசி நாள். விடிந்த போது சாதாரணமாத்தான் விடிந்தது. பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணத்தினை கைப்பற்ற இராணுவத்தினர் தாக்குதலை நடாத்தி வருவதும், அன்றைக்கு சில நாட்கள் முன்பாக அந்த நடவடிக்கையை முறியடிக்க புலிகள் மேற்கொண்ட நடவடிக்கை வெற்றியைத் தராமல் போனதும் அப்போதைய பரபரக்கும் செய்திகள்.

யுத்த முனையில் இராணுவத்தினரின் கைகள் ஓங்கியிருப்பது பலருக்கும் தெரிந்திருந்தாலும் புலிகளின் இராணுவ நகர்வுகள் பற்றி யாருக்கும் எதிர்வு கூற முடியாதென்கிற நிலையில் எந்த ஒரு யாழ்ப்பாண குடிமகனும் தானும் உறவும் ஒட்டுமொத்தமாய் இந்த நிலத்தை விட்டுப் பிரிவோம் என்று நினைத்திருக்க வில்லை.

காலையில் பாடசாலைக்கு புறப்படுகின்றவன் மாலையில் சில வேளைகளில் நான் திரும்பி வராது இருக்க கூடும் என்று நினைத்திருப்பான். குண்டு வீச்சு விமானங்களின் இரைச்சல் கேட்டவன் இந்த விமானங்கள் வீசும் ஏதாவது ஒரு குண்டில் நான் செத்துப் போகலாம் என்று நினைத்திருப்பான். ஷெல் வீச்சுக்கள் அதிகமாகும் போது ஏதாவது ஒரு ஷெல் என் தலையில் விழுந்து யாரேனும் என்னைக் கூட்டி அள்ளிச் செல்லக் கூடும் என நினைத்திருப்பான். ஆனால், ஒரே இரவில் ஒன்றாய்க் கூடி வாழ்ந்த மண்ணைவிட்டு தூக்கியெறியப்படுவோம் என எவரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

ஆனால் இன்றைய மாலை அத்தனைபேரும் தங்கள் வேர்களைப் பிடுங்கி நடந்தார்கள். எங்கே போவது, என்ன செய்வது என்னும் எந்தச் சிந்தனையும் இன்றி உயிர் பிழைக்க வேண்டும் என்ற நோக்கோடு மட்டும் நடந்தார்கள்.

இரவு நெருங்குகிறது. இன்றைக்கும் புத்தூர்ப் பகுதிகளில் சண்டை நடந்தது என பேசிக்கொள்கிறார்கள். மின்சாரம் இல்லாத அந்தக் காலத்து யாழ்ப்பாணம் மிகச் சீக்கிரமாக நித்திரைக்கு சென்று விடும்.

8 மணியிருக்கும். பரவலாக எல்லா இடங்களிலும் ஒலிபெருக்கி கட்டிய வாகனங்களில் அறிவிப்பு செய்கிறார்கள் புலிகள்.

**யாழ்ப்பாணத்தைகைப்பற்றிபாரியஇன அழிப்பு நடவடிக்கையை இராணுவம் மேற்கொள்ள இருக்கின்றதனால் உடனடியாக பாதுகாப்பான பிரதேசங்களான தென்மராட்சி வடமராட்சி வன்னிப் பகுதிகளுக்கு சனத்தை இடம்பெயருமாறு கோரியது அந்த அறிவிப்பு.**

யாழ்ப்பாண குடாநாட்டில் அப்போதிருந்த அண்ணளவான மக்கள் தொகை 5 லட்சம். யாழ் குடாநாட்டினை வட பகுதியின் மற்றைய பிரதேசங்களுடன் இணைத்திருந்த வெறும் இரண்டு வீதிகளினூடாக 5 லட்சம் மக்கள் ஓர் இரவு விடிவதற்குள் கடந்து செல்ல வேண்டும் என்பதனை கற்பனை செய்தும் பார்க்க முடியாது.

ஆனால் மக்களுக்கு அதற்கெல்லாம் நேரமிருக்க வில்லை. மூட்டை முடிச்சுக்களை கட்டி எல்லோரும் வீதிகளில் இறங்க இறுகிப்போனது வீதி.

இப்போது நினைத்துப்பார்த்தால், புலிகள் அந்த வெளியேற்றத்தை திட்டமிட்டு நடாத்தி முடித்திருக்கலாமோ என தோன்றுகிறது. ஏனெனில் அந்த இடப்பெயர்வு முடிந்து அடுத்த இரண்டு மாதங்கள் வரை யாழ்ப்பாணம் புலிகளின் கைகளில் தான் இருந்தது. இடப்பெயர்வின் பின்னர் ஒரு பத்து பதினைந்து நாட்கள் வரை இடம் பெயர்ந்தவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் சென்று பொருட்கள் எடுத்துவர அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

ஆனால் எந்த விதமான முன் தீர்மானமும் இன்றி நெருக்கடியான நிலையிலேயே புலிகளும் இந்த முடிவினை எடுத்திருந்தார்கள் என்பதற்கு மக்களோடு மக்களாக இடம் பெயர்ந்த புலிகளின் படையணிகளும், காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த போராளிகளும் சான்று.

அந்த இரவு மிகப்பெரும் மனித அவலத்தை சுமந்தது. இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், வயதான அம்மா அப்பா இவர்களை வீட்டிலே விட்டு வந்தவர்கள், நிறைமாத கர்ப்பிணிகள், முதியவர்களைச் சுமந்தவர்கள் என வீதியில் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு ஒரு மணி நேரம் ஆயிற்று.



தண்ணி கேட்டு அழுத குழந்தைகளுக்கு பெய்த மழையை குடையில் ஏந்தி பருக்கியவர்கள். லொறிகளில் றேடியேற்றருக்கென வாளிகளில் தொங்கும் தண்ணீரை எடுத்து குடித்தவர்கள். வீதியில் இறந்த முதியவர்களை அந்த சதுப்பு நிலத்தில் குழி தோண்டி புதைத்தவர்கள் உலகம் என்ற ஒன்று பார்த்து 'உச்' மட்டும் கொட்டியது.

அடுத்த காலையே வானுக்கு வந்து விட்ட விமானங்கள், நிலமையை இன்னும் பதற்றப்படுத்தியது. அந்த வீதிக்கு அண்மையாக எங்கு குண்டு வீசினாலும் ஆயிரக்கணக்கில் பலியாக மக்கள் தயாராயிருந்தனர்.

24 மணிநேரங்களிற்கும் மேலாக நடக்க வேண்டியிருந்தது. நடந்தும் தங்க இடமெதுவும் இன்றி ஆலயங்கள், தேவாலயங்கள், பஸ் நிலையங்கள் என கண்ணில் பட்ட இடங்களில் மக்கள் தங்கள் வாழ்க்கையைத் தூக்கிப்போட்டனர். காலங்காலமாய் வாழ்ந்த மண்ணை விட்டு ஒரே நாளில் நிர்ப்பந்தங்களால் தூக்கியெறியப்படின் அந்த வலி எப்படியிருக்கும். அதே வலி இன்று.

நன்றி – சாரல்

# கருணாவின் புதிய அவதாரம்: பின்புலம் என்ன?

விடுதலைப்புலிகளின் முன்னாள் தளபதியும் மஹிந்த ராஜபக்ஷ அரசின் போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரதித்தலைவராகவும் பிரதி அமைச்சராகவும் பதவி வகித்த கருணா அவர்கள் அண்மையில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்ட விடயங்கள் பல தளங்களில் சர்ச்சைகளையும் விமர்சனங்களையும் குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் விசனத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன. நேர்காணலை பார்த்த ஒவ்வொருவரும் அதன் உள்ளடக்கங்களை ஒவ்வொன்றாக உருவி எடுத்து தமக்கு தமக்கு தேவையான விடயங்களை பொதுவெளியில் செய்தியாக முன்வைக்கும்போது எது சுவாரஸ்யம்மிக்கது என்ற அடிப்படையிலும் எது ஜனரஞ்சகசுவை மிக்கது என்ற கோதாவிலும் எடைபோட்டு அவற்றை மட்டும் தனி அலைவரிசையில் தாங்கி சென்று அவற்றுக்கு வியாக்கியானம் கொடுப்பதில் குறியாக இருக்கின்றனர்.

இந்த நேர்காணலில் உள்நாட்டு அரசியல் பேசப்பட்டிருக்கிறது. இலங்கையை மையமாகக் கொண்ட பூகோள அரசியல் பேசப்பட்டிருக்கிறது. போர்க் குற்றங்கள் பேசப்பட்டியிருக்கின்றன. அதற்கான பொறுப்புக்கூறல் பற்றி பேசப்பட்டிருக்கிறது. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றி பேசப்பட்டிருக்கிறது. விடுதலைப்புலிகள் பற்றி பேசப்பட்டியிருக்கிறது. அவர்கள் தொடர்பாகவும் இலங்கையினதும் ஒட்டுமொத்த இராணுவ விவகாரங்கள் தொடர்பாகவும்ஆழமாகப்பேசப்பட்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியா பற்றி பேசப்பட்டிருக்கிறது. இந்தியா தொடர்பான விடயத்தில் கருணா கூறிய பல கருத்துக்கள் மேலே குறிப்பிட்ட எல்லா தலைப்புக்களுக்கும் ஒரே பதிலாகவும் அமைந்திருக்கிறது.

அதாவது, முதல் தடவையாக இலங்கையின் பிரதான கட்சிகளில் ஒன்றான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பொறுப்பிலிருந்த கருணா, நடந்து முடிந்த போரில் இந்தியாவின் நேரடி பங்களிப்பு குறித்து தனது ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கியிருக்கிறார். 'இறுதிக்கட்ட போரின்போது வன்னியில் தளமைத்திருந்த இந்தியப் படையினர்.இலங்கை இராணுவத்தினருக்கு ஆட்லறி மற்று செய்மதி படங்களின் ஊடாக தாக்குதல் நடத்தும் பிரதான இராணுவ மூலோபாய உத்திகளுக்கு களத்தில் பக்கபலமாக நின்று யுத்தம் நடத்தினார்கள்' என்று கூறியுள்ள கருணா, விடுதலைப்புலிகளை அழிப்பதில் ஒரே குறியாக செயற்பட்ட இந்தியா தனது காரியத்தை வெற்றிகரமாக சாதித்ததாகவும் தெரிவித்திருக்கிறார். இந்த விடயங்கள் யாவும் முன்னர் ஊடகங்களில் அவ்வப்போது ஹேஸ்யங்களாகவும் மூன்றாம்நிலை அதிகாரிகளை மேற்கோள்காட்டி வெளிவந்திருந்தபோதும், போரை நடத்திய மஹிந்த அரசு தரப்பின் மிகமுக்கியமான ஒருவரின் ஊடாக அதாவது, அந்த அரசில் பிரதிஅமைச்சு பதவியையும் கட்சியின் பிரதித் தலைவர் என்ற பதவியையும் வகித்தவரின் ஊடாக சொல்லப்பட்டிருப்பது ஆழமாக இன்றைய நிலையில் நோக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

போர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, மஹிந்த அரசுக்கு இராணுவ ரீதியாக உதவியளிக்கக் கூடாது என்று இந்தியாவின் நடுவண் அரசை நோக்கி பல்வேறு தரப்பிலிருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதும் தமிழகத்திலிருந்து அழுத்தங்கள் வழங்கப்பட்டபோதும் பொதுமக்களுக்கு எதிரான இலங்கையின் போருக்கு இந்தியா ஆதரவளிக்காது என்றும் அப்படியே இராணுவ உதவிகளை வழங்கினாலும் கனரக ஆயுதங்களை இலங்கைக்கு வழங்காது என்றும் அதிலும் குறிப்பாக பாரிய அளவில் பங்கம் விளைவிக்கும் போர் உபகரணங்களை இலங்கைக்கு வழங்காது என்றும் டெல்லி தரப்பு தன்னிடம் கோரிக்கை விடுத்த எல்லோரிடமும் அடித்துக்கூறியது. ஆனால், கருணா தற்போது தெரிவிக்கும் விடயங்கள், போரின்போது இந்தியா மேற்கொண்ட 'இரகசியமான கைங்கரியங்கள்' அனைத்தையும் அப்பட்டமாக வெளிச்சத்துக்கு கொண்டுவந்திருக்கின்றன. இவ்வாறான ஒரு பின்னணியில், தற்போது அனைத்து தரப்பினரும் அசைபோடும் போர்க்குற்ற விசாரணை என்ற விடயத்தினை இலங்கைக்கு எதிராக கொண்டுவருவதற்கு இந்தியா அனுமதியளிக்குமா? அவ்வாறான ஒரு விசாரணை இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும்போது அந்த விசாரணை போரில் நேரடியாக பங்குகொண்ட இந்திய படையினரையும் இந்த விசாரணையின் உள்ளே இழுத்து சென்று துவம்சம் செய்யாதா? இந்தக் கேள்விகளுக்கு மஹிந்த காலத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவம் காத்திரமான பதிலாக அமையும்.

அதாவது, மஹிந்த ஆட்சிக்காலத்தில், சீனாவின் நீர்மூழ்கிக்கப்பல்கள் கொழும்பு துறைமுக கடற்பரப்புக்கு வந்தது தொடர்பாக சீற்றமடைந்த இந்தியா, பாதுகாப்பு செயலாளர் கோட்டாபயவை தொடர்புகொண்டு **'சீனாவுடன் நீங்கள் காட்டும் ஒட்டுறவென்பது எல்லைமீறி போகிறது போலத்தெரிகிறது. இந்த நிலைமை தொடருமானால், இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தங்களுக்கு இந்தியா ஆதரவளிக்கவேண்டிவரும்'** என்று பொரிந்து தள்ளியபோது அதற்கு மிகவும் நிதானமாக பதிலளித்த கோட்டாபய **'அவ்வாறு நீங்கள் ஒரு நடவடிக்கையை மேற்கொள்வீர்களேயானால், இறுதிக்கட்ட போரின்போது இந்திய தரப்பினர் எங்களோடு பேசிய விடயங்கள் குறித்த பதிவு செய்த உரையாடல்கள் மற்றும் போருக்கான இந்தியாவின் உதவிகள் என்பவை குறித்து நாங்களும் விரிவாக எல்லோருக்கும் தெரியும்படி வெளியிடவேண்டியிருக்கும்'** என்று கூறியதுடன் இந்தியா மௌனமாகியது. மஹிந்த ஆட்சியிலிருக்கும் வரை சீனாவின் ஊடாகவும் அதன் அரவணைப்பில் திளைத்துக்கொண்டிருந்த மஹிந்தவின் ஊடாகவும் இரட்டை தலைவலியில் 'திருடனுக்கு தேள்கொட்டியது போல' வலியோடு வளைந்துகொடுத்துக்கொண்டிருந்த இந்தியா, தற்போது மைத்திரியின் ஆட்சி மாற்றத்தோடு சற்று பெருமூச்சுவிட ஆரம்பித்திருந்தது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இந்த பின்புலத்தில் இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை என்ற விடயத்தில் தனது பொருளாதார சகோதரமான அமெரிக்காவுடன் இணைந்து இந்தியா மேற்கொண்டிருக்கும்'உள்நாட்டுவிசாரணை பொறிமுறை' என்ற காய்நகர்த்தலை தேர்தல் முடிவுற்ற கையோடு இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் தெற்காசியாவுக்கு பொறுப்பான உதவி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால் தெளிவாக கூறி சென்றிருக்கிறார்.

இந்த களநிலை யதார்த்தங்களை எடுத்து நோக்கினால்,இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணையின் எதிர்காலம் என்ன? ஐ.நா. சபையில் எதிர்வரும் செப்டெம்பரில் நடக்கப்போவது என்ன? என்ற கேள்விகளுக்கெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும்தான் பதில் சொல்லவேண்டும் என்றில்லை. சாதாரண பொதுமகனுக்கே புரியக்கூடிய வெளிப்படை உண்மைதான் இது.

சரி, கருணாவின் நேர்காணலில் கூறப்பட்டுள்ள இன்னொரு முக்கியமான விடயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பற்றியதாகும்.

இவ்வளவுகாலமும் தென்னிலங்கையின் செல்லப்பிள்ளையாக பேரினவாத கட்சிகள் கொஞ்சிக்குலாவிய தீடீர் ஜனநாயகப் போராளியாக போற்றப்பட்ட கருணா, தற்போது கனவுகண்டு இடையில் எழும்பி புலம்புபவர்போல, தான் பிரதித் தலைவராக அங்கம் வகித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை இனவாத கட்சி என்றும் துவேச கட்சி என்றும் இந்தக் கட்சியை தூக்கியெறிந்துவிட்டு வருவதற்கு தான் தயார் என்றும் கூறி விடுதலைப்புலிகளின் தலைவரை துதிபாட ஆரம்பித்திருப்பது பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்பில் அங்கம் வகிக்கையில் ஐரோப்பிய சுற்றுப்பயணம் சென்று அங்கு கூடிய பெரும்திரளான தமிழ்மக்கள் மத்தியில் பேசும்போது 'தலைவர் பிரபாகரன் காலத்தில் தான் தமிழ்மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும்' என்று அடித்துக்கூறிவிட்டு விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்று சுதந்திரக் கட்சியின் சுகானுபவங்களை சுகித்துக்கொண்டிருக்கும்போது 'தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில்தான் இந்த நாட்டுமக்களுக்கு ஒரு விடிவு கிடைக்கும்' என்று தான் முன்னர் பேசிய வசனத்தில் பெயரை மட்டும் மாற்றிவிட்டு, தனது விசுவாசத்தின் வடிவத்தை மாற்றிய கருணா இன்று மீண்டும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை தியாகி என்றும் போற்றுதற்குரிய தலைவர் என்றும் சித்தத்தெளிவேற்பட்டவராக அருள்வாக்கு கூற ஆரம்பித்திருக்கிறார். அது மட்டுமல்லாமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் தமிழ்மக்களின் தலைவிதியை தீர்மானிக்கவல்ல சரியான அரசியல் சக்தி என்று கூறியிருக்கிறார். இன்னும்இரெண்டொருநாட்களில்'சம்பந்தன் தலைமையில்தான் தமிழ் மக்களுக்கு விடிவு ஏற்படும்' என்று அவர் அறிக்கை விட்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.



2004ஆம் பொதுத்தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண வேட்பாளர்களை தனக்கேற்றவாறு செயற்படுத்துவதற்காக கடத்திச் சென்று பின்னர் விடுவித்தது மட்டுமல்லாமல், அக்காலப்பகுதியில் கிழக்கில் இடம்பெற்ற கூட்டமைப்பின் முக்கயஸ்தர்கள் மற்றும் அதற்கு ஆதரவளித்த ஊடகவியலாளர்கள் உட்பட பலரின் படுகொலைகள் தொடர்பாக பகிரங்கமாக குற்றஞ்சாட்டப்பட்ட கருணாவுக்கு தற்போது கூட்டமைப்பின் மீது ஏற்பட்டுள்ள திடீர் ஞானோதயத்தின் பின்னணி என்ன? இந்த இடத்தில், கொள்கை மாறாத துரோகமே உருவான ஒரு நபரது அரசியல் நிலைப்பாட்டுக்கு ஏற்றவகையில் தமிழ்க் கூட்டமைப்பு காணப்படுகிறதா? அல்லது கூட்டமைப்புக்கு வலைவீசும் மர்மமான திட்டத்துடன் கருணா களமிறக்கப்படுகிறாரா? என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது. ஆனால், கருணாவின் இந்த புதிய நிலைப்பாடானது அரசியல் ரீதியானதோ? இராஜதந்திர ரீதியானதோ? அல்ல. இது முழுக்க முழுக்க புலனாய்வு ரீதியானது என்பதை குறிப்பிட்ட அவரது செவ்வியினது பல பாகங்கள் அவரையும் அறியாமல் பல இடங்களில் வெளிக்காட்டி நிற்கிறது.

புலனாய்வுத் திட்டங்கள் எனப்படுபவை அவை தன்முனைப்பு பெறுவதற்கு முன்னர் தான் சார்ந்த செயற்பாட்டு தளத்தினை மறுதலிப்பதன் ஊடாகவே தன்னை முன்னிறுத்துவது வழக்கம். அவ்வாறான மறுதலிப்பு நகர்வின்போது அந்த திட்டங்கள் ஒருபோதும் அதன் உண்மையான பின்னணிகளை சந்தேகத்துக்கு உட்படுத்துவதில்லை. இந்த கோட்பாட்டின் அடிப்படையில் பார்க்கும்போது, இந்தியாவுக்கு எதிரான பொதுவெளியில் ஏற்கெனவே ஓரளவுக்கு அறியப்பட்ட போர்க்குற்றச் சாட்டுக்களுடன் களமிறங்கும் கருணா, எந்தப் பாதையில் பயணிக்கிறார் என்பதும்அவர்யாரால்செயற்படுத்தப்படுகிறார் என்பதும் புரிந்துகொள்ளமுடியாத புதிர் அல்ல. **சிங்களத்தின் குகைக்குள்ளிருந்து கர்ஜித்த எத்தனையோ சிங்கங்களுக்கு கடந்த காலங்களில் துப்பாக்கிகளால் விடைகொடுத்து சிலை வைத்த வரலாறு தான் கொழும்பு அரசியல்.** அவ்வாறான ஒரு பின்னணியில், இவ்வளவு துணிச்சலுடன் இன்னமும் பேரினவாத கட்சியொன்றில் இருந்துகொண்டு, அந்தக் கட்சியையும் வல்லரசுகளையும் ஒருவர் வம்புக்கு இழுக்கிறார் என்றால், அவர் தமிழ் மக்களுக்கு ஏதோ 'பெரிதாக' செய்ய விரும்புகிறார் என்றுதான் அர்த்தம்.

இலங்கையில் தற்போது ஏற்படுவதற்கு ஆரம்பித்துள்ள அரசியல் ஸ்திரத்தன்மை என்பது இந்தியாவின் பாரம்பரிய அரசியல் இராஜதந்திர நிகழ்ச்சி நிரலுக்கு ஒவ்வாத சமன்பாடாகும். தமிழர் அரசியலிலேயே அதற்கான வரலாற்றுக்காரணிகள் கொட்டிக்கிடக்கின்றன. ஆயுதக்குழுக்களின் உருவாக்கத்திலிருந்து முள்ளிவாய்க்கால் வரை தமிழ்த் தேசிய அரசியலில் இந்தியா மேற்கொண்ட பிரித்தாளும் தந்திரமும் ஜே.வி.பியின் முக்கியஸ்தர் சோமவன்ஸ அமரசிங்கவை கிளர்ச்சிக்காலத்தில் பாதுகாத்து வெளியேற்றி பின்னர் நவ அரசியல் யுகத்தின்போது மீண்டும் அவரை களத்தில் இறக்கிவிட்டு குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கதலைப்பட்டது போன்றசம்பவங்கள் முதல் ஆட்சிமாற்றங்களுக்காக ஆட்களை வாங்கும் இன்றைய அரசியல்வரை தென்னிலங்கையிலும் இந்தியா மேற்கொள்ளும் காய்நகர்த்தல்கள் யாவும் தனது நலனை முன்னிலைப்படுத்தியதே ஆகும். அந்த வகையில், விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து ஐக்கிய தேசிய கட்சியின் உதவியுடன் பிரிக்கப்பட்டு மஹிந்தவால் வளர்க்கப்பட்டு தற்போது எந்த பின்னணியும் இல்லாத தளத்திலுள்ள கருணாவை இந்தியா தத்தெடுத்திருக்கிறது.


அமெரிக்க - இந்திய புலனாய்வு இயந்திரம் மஹிந்தவின் அணியிலிருந்த பொன்சேகாவை பிரிந்தெடுத்து அவரால் தாம் விரும்பிய மாற்றத்தைக் கொண்டு வர முடியாமல் போன போது கூட சளைக்காமல் மீண்டும் முயற்சி செய்து மைத்திரி விடயத்தில் வெற்றிகண்டது. ஆனால், தற்போதைய இராஜதந்திர - புலனாய்வு பந்தயத்தில் கருணா எனப்படுபவர் ஏற்கெனவே பணம் கட்டி வெற்றிபெற்ற பந்தயக் குதிரை. அதனால் தான் இரட்டிப்பு நம்பிக்கையுடன் மீண்டும் களமிறக்கப்பட்டிருக்கிறார்.

தமிழ்மக்களின் அரசியல் இருப்புக்கும் எதிர்காலவிடிவுக்கும் கருணா துரோகியா? அல்லது கருணா மட்டும்தான் துரோகியா? என்பதற்கு இறந்தகாலம் பல பதில்களை சொல்லிவிட்டது. அதே பதில்களைத்தான் வருங்காலமும் கூறப்போகின்றதா? என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் சொல்லவேண்டும்.

ப.தெய்வீகன்



# பிராந்தியச் செய்திகள்



## வழிபாட்டில் ஈடுபட்ட பூசகர் உட்பட 15 பேர் கைது வவுனியாவில் பொலிஸார் அதிரடி

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட புளியங்குளம் பழைய வாடி கிராமத்தில் வழிபாட்டில் ஈடுபட்ட பூசகர் உட்பட 15 நபர்களை அனறு(2020.10.31) மதியம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

புளியங்குளம். பழைய வாடி கிராமத்திலுள்ள சிவநாகதம்பிரான் ஆலயத்தில் பௌர்ணமி தின விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுவதற்குரிய விசேட ஏற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் அங்கு சென்றபுளியங்குளம் பொலிஸார் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றாது வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர் எனத் தெரிவித்து பூசகர் உள்ளிட்ட 15 நபர்களைக் கைதுசெய்து புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை ஆலயத்தினுள் அனுமதிக்கவேண்டாம் என்று அப்பகுதி சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் ஆகியோரினால் அறிவித்தல் வழங்கப்பட்ட நிலையில் அதனை மீறிச் செயற்பட்டனர் என்று தெரிவித்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொரோனா தொற்றாளருடன் பஸ்ஸில் யாழ் வந்த 6 பயணிகள் தலைமறைவு

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கொழும்பில் உணவகம் நடத்தும் உரிமையாளருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவருடன் பேருந்தில் பயணித்தவர்களில் 37 பேர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 6 பேர் தொலைபேசியை நிறுத்தி வைத்து தலைமறைவாகியுள்ளனர். அவர்கள் 6 பேரையும் கண்டறியும் பணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: 'யாழ்ப்பாணத்துக்கு கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணிக்குப் புறப்பட்ட என்.சி.ஜி என்ற பெயர் கொண்ட டபிள்யூ. பி.என்.சி 8760 என்ற இலக்கமுடைய பஸ்ஸில் பயணித்தவர்கள் சமூக அக்கறையுடன் உடனடியாக சுகாதார அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

அத்துடன் பஸ் சேவை நிறுவனத்திடமிருந்து பயணித்தவர்களின் தொலைபேசி இலக்கம் பெறப்பட்டு சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதாரத் துறையினர் நேற்று ஈடுபட்டனர். அவ்வாறு 37 பயணிகள் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

அத்துடன், சாரதியும் நடத்துனரும் கொழும்பில் தங்கியுள்ள நிலையில் சுயதனிமைப்படுத்தப்பனர். எனினும் அந்த பஸ்ஸில் பயணித்த 6 பேர் அலைபேசியை நிறுத்தி வைத்துவிட்டு தலைமறைவாகியுள்ளனர். அவர்கள் 6 பேரையும் கண்டறியும் பணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது' என்றார்.

## இலங்கையில் 105 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா!

இலங்கையில் 105 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தெமடகொடவிலுள்ள கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் பெண் அதிகாரி ஒருவர் உட்பட இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதற்கமைய, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் இதுவரையில் 26 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




இலங்கையில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அதிலும் கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளிலேயே கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகம் காணப்படுவதாகவும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த தொற்றில் சாதாரண பொதுமக்கள் மட்டுமன்றி வைத்தியர்கள், தாதியர்கள், பொலிஸ் அதிகாரிகள், உயரதிகாரிகள் ஆகியோரும்பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 663ஆக காணப்படுகின்றது. இவர்களில், நான்காயிரத்து 399பேர் வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளதுடன் இன்னும் ஆறாயிரத்து 244 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இலங்கையில் இதுவரை 20பேர் கொரோனா தொற்றினால் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 1592 குடும்பங்களை சேர்ந்த 3959பேர் தனிமைப்படுத்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தங்களின் விடுகளில் தனிமைப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதற்கு மேலதிகமாக கொரோனா தொற்று என மருத்து பரிசோதனைகள் மூலம் உறுதியானவர்கள் மாவட்டத்தில் 35பேர் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் இதில் கொறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரிவில் மாத்திரம் 31பேரும் வெல்லாவெளி பட்டிப்பளை களுவாஞ்சிக்குடி ஓட்டமாவடி ஆகிய பிரதேச செயலக பிரிவில் தலா ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான கணபதிப்பிள்ளை கருணாகரன் மாவட்ட ஊடகப் பிரவுக்கு இன்று தெரிவித்தார்.

கொரோனா நோய் தொற்றுகாரணமாக தொழில் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கு இரண்டு வாரங்களுக்கு தேவையான 5000.00ரூபாய் பெறுமதியான உலர் உணவுப்பொருட்களை வழங்குவதற்கான நிதியினை அரசாங்க அதிபரின் துரித நடவடிக்கையினால் திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிக்கல அவர்களினால் உடன டியாக நிதி விடுவிக்கப்பட்டு பிரதேச செயலாளர்களுக்கு அன்று(2020.10.31)முதல் உலர் உணவுப்பொதிகளை வழங்குவதற்கு அரசாங்க அதிபர் உத்தரவிட்டார்.

உலர் உணவு பொருட்களை வழங்கும் நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றது எதிர்காலத்தில் தொழில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

அதிகமாக தொற்றாளர்கள் மற்றும் நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்ற பகுதியாக கொறளைப்பற்று மத்தி பிரதேசமே கானப்படுகின்றது இங்கு 1335பேர் தனிமைப்படுத்தலுக்கும் 31பேர் சிகிச்சை பெற்றும் வருகின்றனர் அதேபோன்று கொரோனா தொற்றாளர்கள் குறைவாக பதிவான பிரதேசமாக பட்டிப்பளை காணப்படுகின்றது இங்கு 11குடுப்பளை சார்ந்த 47பேர்களும் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் நோய்தொற்று உறுதியானவர் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மாவட்டத்தில் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் அனைவரும் வெளிமாவட்டங்களில் தொழில் நிமிர்த்தம் சென்று வந்தவர்களாகவே உள்ளனர் இவர்களுக்கான மருத்துவ உதவிகளை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளின் கண்காணிப்பில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் பொது சுகாதார பரிசோதகர்கள் இணைந்து செயற்படுத்தி வருகின்றனர் இதற்காக கிழக்கு மாகாண கொரோனா தடுப்பு இணைப்பாளரான வைத்திய கலாநிதி எம்.அச்சுதன் அவர்களின் சிறந்த மேற்பார்வையில் பணிகள் மக்களுக்கு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## தொற்றாளர்களை இனங்காண்பதில் பலத்த இடர்பாடு முல்லை பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர்

கொரோனாத் தொற்றானது எவ்வித அறிகுறிகளும் இல்லாமலே மக்களிடத்தில் பரவிவருவதாலும், பி.சி.ஆர் பரிசோதனைகளிலும் தொற்றுள்ள பெரும்பாலானோருக்கு சாதாரண முடிவுகள் கிடைப்பதாலும் தொற்றாளர்களை இனங்காண்பதில் பாரிய இடர்பாடுகள் உள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் த.காண்டீபன் தெரிவித்துள்ளார்.முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது கொரோனாத் தொற்றானது, தொற்று ஏற்பட்டாலும் எந்தவிதமான அறிகுறிகளையும் காட்டாமலேயே மக்களிடத்தே பரவிவருகின்ற காரணத்தினால், நாம் 14 நாட்கள் கடக்கும் வரையில் எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என்று கூறுவது கடினம். முக்கியமாக பி.சி.ஆர் பரிசோதனையின் பிரகாரமே அறிகுறி இல்லாதவர்களுக்கும், தொற்று இருக்கின்றதா, இல்லையா என முடிவுசெய்யவேண்டியுள்ளது.

அதேவேளை குறித்த கொரோனத் தொற்றானது பி.சி.ஆர் பரிசோதனையிலும் கிட்டத்தட்ட 70 வீதமான வர்களுக்கு தொற்று இருந்தால்கூட சாதாரண முடிவுகளைக் காட்டுகின்றது. ஆகையினால் கொரோனாத் தொற்றைக் கண்டுபிடிப்பதென்பது மிகவும் கடினமான காரியமாகும்.எனவே எமக்குச்சந்தேகமான அனைவரையும் சுயதனிமைப்படுத்தலிலோ, அல்லது மற்றவர்களுடன் சம்பந்தப்படாத ஓர் இடத்திலேயோ தனிமைப்படுத்துவதை நாம் வழக்கமாகக்கொண்டுள்ளோம்.'






## பொலிவூட் நடிகை தீபிகாவின் மேலாளர் வீட்டில் திடீர் சோதனை!

பிரபல பொலிவூட் நடிகையான தீபிகா படுகோனேவின் மேனேஜர் வீட்டில் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் (The Narcotics Control Bureau) நடத்திய திடீர் சோதனையில், கஞ்சா எண்ணெய் உள்ளிட்ட போதைப் பொருள்கள் சிக்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மும்பையில் பிரபல பொலிவூட் நடிகர் சுசாந்த் சிங் ராஜ்புத் மர்மமான முறையில் மரணம் அடைந்தது குறித்த வழக்கு விசாரணையில், பொலிவூட் திரையுலகில் போதைப் பொருள் நடமாட்டம் இருப்பது குறித்த தகவல் வெளியானது. இதையடுத்து போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் நடத்திய விசாரணையின் போது சுசாந்தின் முன்னாள் மேலாளர் ஜெயா சாகாவுடன் 2017ம் ஆண்டில் போதைப் பொருள் குறித்து படுகோனேயின் மேலாளர் கரிஷ்மா பிரகாஷ் தொடர்பிலிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதுகுறித்து தீபிகா படுகோனேயிடமும், கரிஷ்மாவிடமும் கடந்த மாதம் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் விசாரணை நடத்தியிருந்தனர். இந்நிலையில், மும்பையின் வெர்சோவா பகுதியிலுள்ள கரிஷ்மா வீட்டில் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் திடீரென சோதனை நடத்தினர். இந்த சோதனையில், 2 போத்தால் கஞ்சா எண்ணெய் (two bottles of cannabis oil) உள்ளிட்டவை சிக்கியுள்ளதாக போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சோதனையின்போது கரிஷ்மா வீட்டில் இல்லை எனவும், அவருடைய தொலைபேசி எண் அணைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. இதையடுத்து விசாரணைக்கு நேரில் சமூகமளிக்கும் படி போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் வீட்டில் இருந்தோரிடம் சம்மன் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தீபிகாவின் மேனேஜர் தலைமறைவாகிட்டதாக கருதி அதிகாரிகள் தேடி வருகின்றனர்.



## பிக்பாஸ் புகழ் லொஸ்லியாவிற்கு திருமணம்

தமிழில் ஒளிபரப்பான பிக்பாஸ் சீசன்கள் அனைத்தும் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றன. 4வது சீசனும் மக்களிடம் அதிக வரவேற்பை பெற்று வருகிறது.

நடந்து முடிந்த 3 சீசன்களிலும் காதலர்கள் உருவானார்கள். கடந்த சீசனில் கூட கவின்-லொஸ்லியாவின் காதல் பரபரப்பாக பேசப்பட்டது. ஆனால் நிகழ்ச்சி முடிந்ததும் இருவரும் யாரோ போல் இருக்கிறார்கள். கவின் அவர் வேலை என்று இருக்க லொஸ்லியா அடுத்தடுத்து படங்கள் கமிட்டாவது, போட்டோசூட் நடத்துவது என பிஸியாக இருக்கிறார்.

இந்த நிலையில் லொஸ்லியா ரசிகர்களை அதிர்ச்சியாக்கும் வகையில் ஒரு தகவல் வந்துள்ளது. அதாவது லொஸ்லியாவிற்கு அவரது பெற்றோர்கள் மாப்பிள்ளை பார்த்துள்ளார்களாம். கனடாவில் உள்ள தனது நண்பரின் மகனை லொஸ்லியாவின் பெற்றோர் திருமணத்திற்கு பேசி வைத்துள்ளதாக கூறப்படுகிறது.



## வேதாளம் ரீமேக்கில் சிரஞ்சீவிக்கு தங்கையாக நடிக்கும் கீர்த்தி சுரேஷ்

தமிழ், தெலுங்கில் முன்னணி ஹீரோயினாக வலம்வரும் கீர்த்தி சுரேஷ், அடுத்ததாக பிரபல நடிகருக்கு தங்கையாக நடிக்க உள்ளாராம்.

சிவா இயக்கத்தில், அனிருத் இசையமைப்பில், அஜித், ஸ்ருதிஹாசன், லட்சுமி மேனன் மற்றும் பலர் நடித்து 2015ம் ஆண்டில் வெளிவந்து பெரிய வெற்றியைப் பெற்ற படம் 'வேதாளம்'. இப்படத்தை தெலுங்கில் ரீமேக் செய்வதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இதில் சிரஞ்சீவி ஹீரோவாக நடிக்கிறார்.

இயக்குனர் மெஹர் ரமேஷ் இப்படத்தை இயக்க உள்ளார். இவர் ஏற்கனவே சிரஞ்சீவி நடித்த 'பில்லா' படத்தின் தெலுங்கு ரீமேக்கை இயக்கியுள்ளார். வேதாளம் படத்தில் அஜித்தை அடுத்து மிக முக்கியமான கதாபாத்திரம் என்றால், அது லட்சுமி மேனன் கதாபாத்திரம் தான். தெலுங்கில் இந்த கதாபாத்திரத்தில் யார் நடிப்பார் என்ற எதிர்பார்ப்பு நிலவி வந்தது.

சிரஞ்சீவி இந்நிலையில், வேதாளம் ரீமேக்கில் சிரஞ்சீவிக்கு தங்கையாக கீர்த்தி சுரேஷ் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தமிழ், தெலுங்கில் முன்னணி ஹீரோயினாக வலம்வரும் கீர்த்தி சுரேஷ், தங்கை கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்புக்கொண்டது பலரையும் வியப்பில் ஆழ்த்தி உள்ளது.



## TRP ரேட்டிங்கில் இந்த வாரம் முதல் இடம் பிடித்த சீரியல்

வாரா வாரம் TRP ரேட்டிங் பற்றி அனைவரும் பார்ப்பது வழக்கம் தான். நமக்கு பிடித்து பார்க்கும் சீரியல் முதல் இடத்தை பிடிக்கிறதா என்பதை பார்ப்பதில் ரசிகர்களுக்கு அவ்வளவு ஆர்வம்.

தற்போது கடந்த வாரம் தொலைக்காட்சியில் ஓடிய சீரியல், படங்களில் அதிக TRP பெற்றதன் விவரத்தை Barc வெளியிட்டுள்ளது.

அதில் வழக்கம் போல் சன் டிவியில் ஒளிபரப்பான மருது படம் முதல் இடத்தை பிடிக்க அதே தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் ரோஜா சீரியல் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது.

3வது இடத்தில் பாரதி கண்ணம்மா, 4வது இடத்தில் பூவே உனக்காக மற்றும் 5வது இடத்தில் புதிதாக பாக்கியலட்சுமி சீரியல் இடம்பெற்றுள்ளது. சீரியல் என்று பார்த்தால் முதல் இடத்தை பிடித்தது ரோஜா சீரியல் தான்.


Tamil Nadu/ Puducherry (U+R) : NCCS All : 2+ Individuals

| RANK | CHANNELS | PROGRAMS | WEEKLY IMPRESSIONS (IN 1000'S) |
|---|---|---|---|
| 1 | Sun TV | TFF-MARUTHU | 9757 |
| 2 | Sun TV | ROJA | 9187 |
| 3 | STAR Vijay | BHARATHI KANNAMMA | 8847 |
| 4 | Sun TV | POOVE UNAKKAGA | 7570 |
| 5 | [illegible] | BHAGYALAKSHMI | 6437 |




## கற்றாழை ஜெல்லை பயன்படுத்தி சருமத்திற்கு பொலிவு சேர்க்க...!!

குளிர்காலத்தில் வழக்கத்தை விட சரும பராமரிப்புக்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். சோர்வான முகம், வறண்ட உதடுகள், உலர்ந்த சருமம், தோல் வெடிப்பு போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும்.

குளிப்பதற்கும், முகம் கழுகுவதற்கும் வெதுவெதுப்பான நீரை பயன்படுத்த வேண்டும். அதிக சூடான நீரை ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது. அது சருமத்திற்கு பாதிப்பை ஏற்படுத்திவிடும். உடலில் எண்ணெய் சிறிதளவு தேய்த்துவிட்டு குளிக்க செல்லலாம். அது சருமத்தில் ஈரப்பதத்தை சீராக பராமரிக்க வழிவகை செய்யும்.



குளித்து முடித்த பிறகு சருமத்திற்கு பொருத்தமான கிரீம் வகைகளை பயன்படுத்தலாம். சர்க்கரை, மது, காபி போன்றவை உடலில் உள்ள தண்ணீரின் அளவை குறைத்துவிடும். குளிர்காலத்தில் அவைகளை அளவோடு பருகுவது நல்லது. போதுமான அளவு தண்ணீர் பருகி வர வேண்டும்.

குளிர்காலத்துக்கு ஏற்ற மாய்ஸ்சரை பயன்படுத்துவது அவசியம். அவை சருமம் மென்மையாக ஜொலிப்பதற்கும், இறந்த செல்களை நீக்கவும் துணை புரியும்.

சருமம் புத்துணர்ச்சி பெறுவதற்கு பழங்களை கொண்டு மசாஜ் செய்வது பலனளிக்கும். அது, வேதிப்பொருட்கள் மற்றும் நச்சுத்தன்மை பாதிப்புகளில் இருந்து சருமத்தை பாதுகாக்க சிறந்த வழிமுறையாகவும் அமையும்.

வாழை, தர்பூசணி, பப்பாளி, கிவி, ஆரஞ்சு மற்றும் ஆப்பிள் போன்ற பழ வகைகளை சாப்பிடுவதும் சரும ஆரோக்கியத்திற்கு நல்லது.

குளிர்காலத்தில் கற்றாழை ஜெல்லை பயன்படுத்துவதும் அவசியமானது. அதில் உள்ளடங்கி இருக்கும் வைட்டமின் சி, இ மற்றும் பீட்டா கரோட்டின் போன்றவை சருமத்திற்கு பொலிவு சேர்ப்பதுடன் முதுமையையும் தள்ளிப்போடும். அதிலும் எண்ணெய் சருமம் கொண்டவர்கள் கற்றாழை ஜெல்லை பயன்படுத்துவது நல்லது.

யாருக்கும் கட்டுப்படாத
என் பிடிவாத குணம்
உனக்காக மட்டும் விட்டு
கொடுத்து போகிறது
உன்னுடைய
பாசத்திற்கு முன்னாள்!





என் பெயரை
யார் உச்சரித்தாலும்
சட்டென்று திரும்பாத
என் மனது
உன் பெயரை
யார் உச்சரித்தாலும்
சட்டென்று திரும்பி விடுகிறது

## ஆவாரம் பூவை பயன்படுத்தி வறண்ட சருமத்திற்கு தீர்வு !!

எளிதில் கிடைக்க கூடிய ஆவாரம் பூவை பயன்படுத்தி இல்லத்தில் இருந்தவாறே வறண்ட சரும பிரச்சனைகளுக்கு எளிதில் தீர்வு காணலாம்.

ஆவாரம் மொட்டு, இலை ஆகியவற்றை வெயிலில் காயவைத்து பொடி செய்து கொள்ளவும். இந்த பொடியுடன் பால் சேர்த்து கலந்து வறண்ட சருமத்தில் பூசி சுமார் 15 நிமிடங்கள் கழித்து கழுவினால் வறண்ட சருமம் சரியாகும்.

ஆவாரம் பொடி, கஸ்தூரி மஞ்சள், கசகசா ஆகியவற்றை நீரில் சேர்த்து கலந்து மேல் பூச்சாக பூசி சிறிது நேரம் கழித்து குளித்தால், வறண்ட சருமம் மாறும். தோல் பளபளப்பாகும்.

ஆவாரம்பூ, பனங்கற்கண்டு, விளாமிச்சை ஆகியவற்றை கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி காலையில் வெறும் வயிற்றில் குடித்துவர வறண்ட சருமம் மாறும்.

ஆவாரம் பூவுடன் வெள்ளரி விதை, கசகசா, பால் சேர்த்து உடலில் தேய்த்து உலர்ந்த பின் கடலைமாவைக் கொண்டு கழுவி வர உடலில் உள்ள வறட்சி நீங்கி மென்மையாகவும், பளிச்சென்றும் இருக்கும்.






தொகுப்பு :- சப்தஹி

# சீனத்தின் குறுநில அரசாக சிறிலங்கா !! எச்சரிக்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்–மைக்பொம்பியோவிற்கு கடிதம்!!

சீனத்துக்கும் சிறிலங்காவுக்கும் இடையே அதிகரித்து வரும் ஒத்துழைப்பு என்பது சிறிலங்காவை சீனத்தின் குறுநில அரசாகி ( Vassal State) விடும் ஆபத்து உள்ளது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் எச்சரித்துள்ளது.

ஐநா மனிதவுரிமைப் பேரவை உள்ளிட்ட பன்னாட்டு மன்றங்களில் சிறிலங்காவைப் பாதுகாப்பதாக சிறிலங்காவுக்கு சீனம் அண்மையில் வழங்கியுள்ள உறுதியினை மையப்படுத்தி அமெரிக்க வெளியுறவுச் செயலர் பொம்பியோவுக்கு எழுதிய கடிதத்தில் இவ்விடயத்தினை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகத்தின் 2020க்கான ஆண்டறிக்கையில் கூறியிருப்பது போல், சீன அரசுக்குச் சொந்தமான நிறுவனமொன்றிடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ள சிறிலங்காவின் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிலை என்பது, இந்தியப் பெருங்கடலுக்குள் அதிகார நீட்சிக்கு இத்துறைமுகதளத்தை சீனம் இராணுவ நோக்கில் பயன்படுத்த விரும்புவதாகத் தெரிகிறது என்பதனையும் பிரதமர் வி. உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனிதவுரிமை மீறல்களிலும், சுற்றுசூழலை வலிந்து அழிவுப்பதிலும், சீனத்தின் நடத்தை என்பது உலகறிந்த விடயம் என்பதும், சீனம் இத்துறைமுகத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றிய அச்சம் அறிவார்ந்த ஒன்றெனவும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

ஆகவே, இந்தச் சிக்கல்களைக் கவனிக்க உங்கள் பதவிப் பொறுப்பின் அதிகாரத்தையும் விருப்புரிமையையும் பயன்படுத்துவது குறித்துக் கருதிப் பார்க்கும் படி சிறிலங்காவுக்கு பயணம் செய்யவுள்ள அமெரிக்க வெளியுறவுச் செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், தமிழினப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல், அம்பாந்தோட்டைதுறைமுகத்தைச் சீனம் பயன்படுத்திக் கொள்ளல் ஆகிய விடயங்களில் சிறிலங்காவை நேரடியாக கேள்விக்குட்படுத்துமாறு கோரியுள்ளது.




மேலும் அமெரிக்க வெளியுறவுச் செயலருக்கு எழுதிய கடித்தில், இலங்கைத்தீவின் இறுதிப்போரின் போது, 70 000க்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டதோடு, சிறிலங்கா அரசு புரிந்த போர்க் குற்றங்களுக்கும் மானிடத்துக்குஎதிரான குற்றங்களுக்கும் நம்பத்தக்க சான்றுகள் இருப்பதாக, ஐநாவின் முன்னாள் பொதுச் செயலர் பான் கி மூன் அமர்த்திய வல்லுநர் குழு அறிக்கையினை பிரதமர் வி.உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் 2015ம் ஆண்டு ஐ.நா மனிதவுரிமை உயராணையர் அலுவலகம் தந்த சிறிலங்கா பற்றிய புலனாய்வு (OISL) அறிக்கையில் முதன்மையாக சிறிலங்கா அரசு அமைப்புசார் குற்றங்கள் புரிந்ததாகக் கூறப்பட்டுள்ளதனையும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் சுட்டிகாட்டியுள்ளார்.

இதேவேளை அமைதிக்கும் நீதிக்கும் இப்பிராந்தியத்தின் பாதுகாப்புக்கும் ஆகச் சிறந்த தீர்வாக, ஸ்காட்லாந்திலும், எரித்ரியாவிலும், கொசாவோவிலும் நடத்தப்பட்டது போல் தமிழர்களுக்கான ஒரு பொதுவாக்கெடுப்பே என்பது நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நம்பிக்கை என பிரதமர் வி.உருத்திரகுமாரன், சுட்டிகாட்டியுள்ளார்.

# சமுதாயத்திற்கு விவேகானந்தரின் பொன்மொழிகள்

01. தீமையை எதிர்க்காதீர்கள்,அகிம்சையே மிக உயர்ந்த ஒழுக்க லட்சியம் என்று ஆச்சாரியார்கள் உப தேசித்து இருக்கிறார்கள். இந்த உபதேசத்தை நம்மில் சிலர் அப்படியே கடைப்பிடிக்க முயல்வோமானால் சமுதாய அமைப்பே இடிந்து தூள் தூளாகி விடும்!

02. அயோக்கியர்கள் நம் சொத்துக்களையும் நம் வாழ்க்கையையும் பறித்துக் கொண்டு தங்கள் விருப்பப்படி நம்மை ஆட்டி வைப்பார்கள். இது நமக்குத் தெரியும். இத்தகைய அகிம்சை சமுதாயத்தில் ஒரேயொரு நாள் கடைப்பிடிக்கப்பட்டாலும் கூட பெரும் நாசமே விளைவாக இருக்கும்.

03. எவர் ஒருவருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ, அவரையே நான் மகாத்மா என்பேன். அன்பு நெறியிற் சென்று உலகம் உய்வடைந்திட வழிகளைக் கூறும் முறை மதம் எனப்படும்.

04. இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.

05. வலிமையின்மையே ஒருவனின் துன்பத்திற்கு காரணம். நாம் பலவீனமாக இருப்பதாலேயே பொய்யும் திருட்டும் ஏமாற்று வேலைகளும் இன்னும் நம்மை விட்டு அகலவில்லை.

06. உலகில் உள்ள மக்கள் உன்னை புகழ்ந்தாலும் சரி இகழ்ந்தாலும் சரி நீ. உண்மை என்னும் பாதையிலிருந்து அணுவளவேனும் பிறழாமல் கவனமாக இருக்க வேண்டும்

07. மனிதப் பிறவிதான் பிரபஞ்சத்திலேயே மிகச் சிறந்ததாகும் எல்லா மிருங்களைக் காட்டிலும் எல்லாக் தேவர்களைக் காட்டிலும் மனிதர்களே உயர்ந்தவர்கள். மனிதர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் யாரும் இல்லை.

08. பணம் மட்டுமே வாழ்க்கையல்ல அதையும் தாண்டி மனிதன் அடைய வேண்டிய அனுபவங்கள் பல உள்ளன. மன நிம்மதி அன்பு தவம் தியானம் முதலிய குணங்கள் எல்லாம் பணத்தால் வருபவை அல்ல.

09. மற்றவர்களின் தெய்வீக இயல்பை வெளிப்படுத்த உதவி செய்வது தான். நம்முடைய தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழியாகும்.

10. உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது! நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம்.

# LTE யின் கரும்புலிக்கட்டமைப்பை விலக்கக் கோரியது அமெரிக்கா

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தமிழீழக் கனவுடன் கடந்த முப்பது ஆண்டுகள் போராடி வந்தமை யாவரும் அறிந்தது . இருந்தபோதிலும் காலத்தின் கட்டாயத்தில் தமது இயக்கத்தின் வளர்ச்சியினை போரியல் வரலாற்றில் உலக நாடுகளுடன் ஒப்பிடும் அளவிற்கு கட்மைப்புக்களை புதிது புதிதாக உருவாக்கி வலுப்படுத்தத் தொடங்கினர். ஆரம்பகாலத்தில் கொரில்லாத் தாக்குதலாகவும், அதிரடித்தாக்குதலாகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த பிரபாகரன் பிந்நாளில் தற்கொலைப் படையயணியை உருவாக்கிக் கொண்டார். இதன் காரணமாக சர்வதேச நாடுகளில் கண்டனங்களுக்க ஆளானார் பிரபா-கரன்.நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் அமெரிக்க அரசு, விடுதலைப்புலிகளுக்கும், இலங்கைஅரசுக்கும்இடையில்நடைபெற்ற போரை முடிவுக்குக் கொண்டுவர முயற்ச்சிகள் எடுத்தது. இதில் 52 நாடுகளும் 22 அரச சார்பற்ற அமைப்புக்களும் பங்கேற்றிருந்தன மட்டுமன்றி 7 கட்டப் பேச்சுவார்த்தைகளையும் நடத்தியிருந்தன. நோர்வே அரசாங்கத்தின் தலையீடோடு விடுதலைப்புலிகளுக்கான ஆயுதங்கள், தளபாடங்கள் ஒலிபெரிக்கிச் சாதனங்கள், நிலத்துக்கு அடியில் வைத்து இயங்கும் சட்டடைல் கருவிகள் ( சட்டடைல் போன் ) என்பன மறைமுகமாக வழங்கப்பட்டன.

அமெரிக்காவின் கூற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்த பிரபாகரனை விட்டுவைப்பதால் தனது நாட்டிற்கும், சர்வதேசத்திற்கும் விடுதலைப்புலிகள் அச்சுறுத்தலாக இருப்பார்கள் என அமெரிக்கா மட்டுமன்றி அனைத்து நாடுகளும் எண்ணின. இதற்குச் சம்மதம் தெரிவிக்காத பிரபாகரனை எப்படி பேச்சுவார்த்தை மேடைக்கு அழைப்பது என நோர்வேயுடன் கலந்தாலோசித்து இடைக்கால நிருவாகம் தொடர்பில் உடன்படச்செய்தது. இதனூடாக தனது புலனாய்வு நடவடிக்கைகளை விடுதலைப்புலிகளின் பிரதேசத்தில் ஊடறுக்கச்செய்து வெற்றிகாணலாம். என அமெரிக்கா எண்ணியது. untitled(3)விடுதலைப்பலிகள் கரும்புலித் தாக்குதல்களை நடத்துவதுபோல் இலங்கை அரசாங்கத்தின் இராணுவப் புலனாய்வை வைத்து அமெரிக்கா ஆளஊடுருவும் படையணியைப் பயன்படுத்தி ஆங்காங்கே விடுதலைப்புலிகளின் தளபதிகளை இலக்குவைத்து கொலைசெய்ய ஆரம்பித்தது.

இதில் விடுதலைப்புலிகளின் விமானப்படைக்குப்பொறுப்பாக இருந்த கேணல் சங்கர் புதுக்குடியிருப்புப் பகுத-ியில் வைத்து கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதற்குப்பிறகு படிப்படியாக லெப் கேணல் மகேந்தி, தமிழ்ச்செல்வன் போன்றோரை ஒன்றன்பின் ஒன்றாக கொலை செய்ய ஆரம்பித்தது.

இக்காலத்தில் வன்னிப்பிரதேசத்தில் பிச்சை எடுத்துகொண்டிருந்த பிச்சைக்காரர்களையெல்லாம் கைது செய்து ஒரு முகாமிற்குள் விடுதலைப்புலிகள் அடைத்து வைத்தனர் ஏனனில் இவர்களூடாக தகவல்கள் கசிந்துவிடக்கூடாது என்பதற்காக. ஆளஊடுருவும் படையணிக்கு தகவல் வழங்கியதாக 29 பொதுமக்களை இங்கொன்றும், அங்கொன்றுமாக வீதியில் வைத்து சுட்டுக்கொன்றனர்.

இதனால் ஆளஊடுருவும் படையயின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம் என விடுதலைப்புலிகள்நினைத்திருனர் ஆனால் அது சாத்தியமற்றதாகியது. அரச தரப்பு



முக்கியமானவர்களை தொடர்ந்து கொலை செய்து வர அடுத்த கட்ட நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் விடுதலைப்புலிகளால் திட்டங்கள் தீட்டப்பட்டன.

ஆனால் பிரபாகரனின் திட்டங்கள் அனைத்தும் விடுதலைப்புலிகள் அமைப்பில் உள்ள பலரினாலும் காட்டிக்கொடுக்கப்பட்டது.

ஒருகட்டத்தில்தேசியத்தலைவர்பிரபாகரன் உரையாற்றும்போது விடுதலைப்புலிகளின் கரும்புலிக்கட்டமைப்பே எனது உயிர்மூச்சு என்று கூறினார். இவர்களைவைத்து தாக்குதல்களை நடத்திவந்தார். இதனால் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மீண்டும் பகமை வலுத்தது.

இடைக்கால நிருவாக வலையமைப்பிற்குள் விடுதலைப்புலிகளை இட்டுச்சென்ற காலத்தில் வேவு நடவடிக்கைகளுக்காக தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்ட விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் சிலர் உல்லாச வாழ்வுக்காக அடிமையாகினர். போரின் தன்மை, அதன் தாக்கம் , அதன் தேவை என்பவற்றினை மறந்த நிலையில் லோரன்ஸ், பொட்டுஅம்மான், துரோணர் நியூட்டன் ஆகியோரால். அனுப்பபட்ட புலனாய்வுப் போராளிகள் .வன்னியில் புலிகளா ?

இதனால் இராணுவப் புலனாய்வுப் பிரிவிடம் சிக்கிக்கொண்டனர். இதன்காரணமாக அடுத்தகட்ட விடுதலைப்புலிகளின் படை நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன. இதன்போது கருணா அம்மானுக்கும், பிரபாகரனுக்கும் இடையில் நிரந்தப் பகமை தோன்றியது. இதனையும் சாதகமாகப் பார்த்த இலங்கையின் புலனாய்வுப்பிரிவு விடுதலைப்புலிகளை இலகுவாகத்தோற்கடிக்கலாம் என்ற தீர்மானத்திற்குள் வந்தது. இவை அனைத்துக்கும் பின்னணியில் இருந்து அமெரிக்காவும், நோர்வேயும் செற்பட்டன. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் கிலாரிகிளின்டன் இந்தியாவுக்கு விஜயம் செய்து கருணாநிதி மூலமாகவும், விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் மூலமாகவும் பிரபாகரனை ஆயுதங்களை கீழே போட முயற்ச்சித்தார். இத்தகவல் பிரபாகரனை எட்டியபோதிலும்,

அவர் சரணடைய மறுத்தார். தற்கொலைப்படையின் ஊடாக அனைத்தையும் சாதிக்கமுடியும் என்ற நிலைப்பாடு தொடர்ந்தும் பிரபாகரனிடம் இருந்து கொண்டே வந்தது. இதற்காக தன்னைச்சுற்றி ஆயிரம் கரும்புலிகளை வைத்திருந்தார். பிரபாகரனக்காக என்னேரமும் தமது உயிரை கொடுக்க அவர்கள் தயாராக இருந்தனர்.

இப்படியான சூழலில் விடுதலைப்புலிகளின் 14 ஆயுதக்கப்பல்கள் சர்வதேசக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்டன. அமெரிக்காவின் விஷேட கப்பல் ஒன்று சர்வதேச கடற்பரப்பில் நின்று கொண்டு விடுதலைப்புலிகளின் கப்பல்பகளை இலங்கையரசுக்குக் காட்டிக்கொடுத்தவண்ணமிருந்தது.முக்கிய விடயம்என்னென்றால்ஆயுதக்கப்பல்களை புலிகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து சேர்க்க கடற்புலிகளின் தளபதி சூசை அவர்களின் உதவி அவசியமாயிருந்தது.

சர்வதேச கடற்பரப்பில் இருந்து பாதுகாப்பாக கப்பல்களைக் கொண்டுவர டோராப்படகுகள் மூலம் விடுதலைப்புலிகளின் கரும்புலிகள் இருபுறமும் ஆதரவு கொண்டிருந்தனர். இவர்களின் பாதுகாப்பையும் மீறி மிகத்துல்லியமான முறையில் விடுதலைப்புலிகளின் கப்பல்களைத் தாக்கியழிப்பதற்கு அமெரிக்கா உதவியது. பிரயோசனமற்ற நிலையில் கரும்புலிகள் வெடித்துசிதறின. 14 கப்பல்களில் எட்டுக்கப்பல்கள் முக்கியமானவை. இவற்றில் இறுதிப்போருக்குத்தேவையான ஆயுதங்கள் சர்வதேச நாடுகளிடம் பெற்றுக்கொண்டுவரப்பட்டன.

இது இவ்வாறிருக்க ஈழப்போரின் இறுதிக்கட்டத்தின் பிரபாகரன் அதிசக்திவாய்ந்த ஆயுதங்களையும் கரும்புலிகளையும் பயன்படுத்தத் தவறிவிட்டார். காரணம் இறுதி நேரத்திலாவது சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகள் அமைப்பு மீது கரிசனை காட்டும் என்று நினைத்தாரோ என்னவோ.

ஆனால் அவ் ஆயுதங்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டிருந்தால் பாரிய ஓர் அழிவினை வன்னி சந்தித்திருக்க வேண்டியிருக்கும். கணிசமான அளவு கரும்புலிகளே இறுதிப்போரில் வெடித்துச் சிதறினர். உதாரணமாக இரணைமடுக்குளத்தை உடைக்க வந்த 5 கரும்புலியினர் இராணுவத்திடம் வந்து சரணடைந்த காரணத்தினால் பிரபாகரனின்போராட்த்தின் உத்தி திசை திரும்பியது.

நிச்சயமாக இரணைமடுக்குளத்தினை உடைத்திருந்தால் இராணுவத்தினர் பெருமளவில் நீரில் அடிபட்டுப்போயிருப்பார்கள். இது விடுதலைப்புலிகளுக்குச் சாதகமாக அமைந்திருக்கும். மறுபுறம் பொதுமக்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பார்கள்.

ஆரம்பகால கட்டத்திலே பிரபாகரன் கரும்புலிக்கட்டமைப்பினை நீக்கியிருந்தால் இன்று வடகிழக்கில் முதலமைச்சராக இருப்பதற்கான வாய்ப்புக்கள் இருந்திருக்கும் ஏனெனில் அவரது செல்வாக்கு அப்படி. இவரை எதிர்த்துப்போட்டியிடக்கூட யாரும் இருந்திருக்கமாட்டார்கள்.

சர்வதேச நாடுகளின் படைகள் கொண்டிருக்கக்கூடிய கட்டமைப்புக்களை விடுதலைப்புலிகள் கொண்டிந்தார்கள் என்பது தமிழினம் பெருமைப்படக்கூடிய விடயம்தான். ஆனால் அதனைச் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியாமைதான் பிரபாகரன் விட்ட தவறாகும்.

முன்னர் எமது பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது போல என்று ஒசாமாபில்லேடன் இரட்டைக் கோபுரத் தாக்குதலை நடத்தினாரோ அன்றே உலகில் உள்ள ஆயுதக்குழுக்களை முடக்க அமெரிக்கா திடசங்கற்பம் பூண்டிருந்தது. மட்டுமன்றி சர்வதேச ரீதியாக ஆயுதப்போரட்டம் பற்றிய அவதானிப்புக்கள் அதிகரித்துள்ளது என்பதை பிரபாகரன் இறுதியில் மறந்துவிட்டார்.

அவரது இலக்கு தமிழ் ஈழமாகவே இருந்தது. **திறமையான போர்வீரன் ஒருவன் மாற்றான் காலடியின் கீழ் சரணடையமாட்டான். என்பதற்கு உதாரணமாக விளங்கியிருந்தார் பிரபாகரன். புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்உன்றஉச்சரிப்பேஅவரிடம் இருந்தது.** அதில் முக்கியமான இன்னொரு விடயம் என்னென்றால் சர்வதேச ரீதியாக விடுதலைப்புலிகளின் தமிழீழ வைப்பகம் அங்கீகாரம் பெற்றிருந்தமை விடுதலைப்புலிகளின் சிறப்பம்சமாகும்.

ஆகவே நோர்வே மற்றும் அமெரிக்காவின் ஆலோசனைப்படி பிரபாகரன் நடத்திருப்பாரென்றால் இன்று பிரபாகரன் நல்லதொருநிலையில்இருந்திருக்கக்கூடும். ஆனால் பிரபாகரனின் போராட்டத்தில்தான் இன்று சர்வதேச ரீதியாக இலங்கைத் தமிழர்களின் உரிமைப்பிரச்சினைகளுக்கு நீதி கிடைக்குமளவிற்கான சூழல் உருவாகியுள்ளது. இதனடிப்படையில் தமிழர்களுக்கான தீர்வு வழங்குவதற்கு உலக நாடுகள் தயாராகவுள்ளன

**இரணியன்**




## தற்போது உலகில் எத்தனை ஐபோன்கள் பயன்பாட்டில் உள்ளது தெரியுமா?

ஆப்பிள் நிறுவனமானது ஐபோன்களை அறிமுகம் செய்ய ஆரம்பித்து இவ் வருடத்துடன் 13 ஆண்டுகள் நிறைவடைகின்றது.

அதாவது முதலாவத ஐபோனை 2007 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்தது.

அன்றிலிருந்து இன்று வரை சுமார் ஒரு பில்லியன் வரையான ஐபோன்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்த தகவலை அந்நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான டிம் குக் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆண்டுதோறும் 20 மில்லியன் தொடக்கம் 30 மில்லியன் வரையான ஐபோன்கள் புதிதாக விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் புதிய ஐபோன் பயனர்களுக்கான விற்பனையானது 20 சதவீதத்திலும் குறைவாகவே இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது புதிய பயனர்களை விடவும் ஏற்கனவே ஐபோன்களை வைத்திருப்பவர்களே புதிய ஐபோன் மொடல்களை அதிகமாக கொள்வனவு செய்கின்றனர்.



## TikTok நிறுவனத்துடன் கைகோர்க்கும் Shopify நிறுவனம்

குறுகிய வீடியோ டப்பிங் அப்பிளிக்கேஷனான டிக் டாக்கினைப் பற்றி அறிந்திராதவர்கள் இருக்கவே முடியாது.

அந்த அளவிற்கு உலகப்பிரபல்யம் பெற்ற அப்பிளிக்கேஷனாக காணப்படுகின்றது.

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ள போதிலும் ஏனைய நாடுகளில் கொடிகட்டிப்பறக்கின்றது.

இப்படியிருக்கையில் பிரபல ஒன்லைன் சொப்பிங் தளமான Shopify ஆனது டிக் டாக் நிறுவனத்துடன் கைகோர்க்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன் மூலம் ஒரு மில்லியனிற்கும் அதிகமான வியாபார நிறுவனங்களின் விளம்பரங்களை டிக் டாக்கின் ஊடாக இலகுவாக மக்களிடம் கொண்டு செல்ல முடியும் என அந்நிறுவனம் கருதுகின்றது.

கனடிய நிறுவனமான Shopify இன் ஒன்லைன் வியாபார தளத்தில் சிறிய மற்றும் நடுத்தர வியாபார நிறுவனங்கள் இணைந்து தமது பொருட்களை விற்பனை செய்து வருகின்றன.

அதேநேரம் டிக் டாக்கிலும் சுமார் 100 மில்லியன் வரையான பயனர்கள் இருக்கின்றனர்.


எனவே அவர்களிடம் இவ் விளம்பரங்களை இலகுவாக கொண்டு செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.




## இன்ஸ்டாகிராமில் நேரடி ஒளிபரப்பு செய்யும் நேரம் நீடிப்பு


பேஸ்புக் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் அப்பிளிக்கேஷன்களில் ஒன்றாக இன்ஸ்டகிராம் திகழ்கின்றது. இதில் புகைப்படங்கள், சிறிய அளவிலான வீடியோக்கள் மற்றும் ஸ்டோரிகள் என்பவற்றினை பதிவேற்றம் செய்ய முடியும். தவிர நேரடி ஒளிபரப்பு செய்யும் வசதியும் காணப்படுகின்றது. இப்படியிருக்கையில் தற்போது நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான நேரத்தினை 4 மணித்தியாலங்களாக உயர்த்தியுள்ளது இன்ஸ்டகிராம்.

எனினும் இக் கால நீடிப்பினை பெறுவதற்கு குறித்த கணக்கானது IP தொடர்பான மற்றும் கொள்கை மீறல் என்பவற்றில் ஈடுபட்டிக்கக்கூடாது என்பது குறிப்பிடத்தக்கது. அது தவிர நேரடி ஒளிபரப்பானது 30 நாட்களுக்கு சேமிக்கப்பட்டிருக்கும். அதன் பின்னர் தானாகவே அழிந்து விடும் என்பதும் குறிப்பிடத்தக்கது.




**உலகம் உன்னை அறிவதற்கு முன்னர் உன்னை உலகிற்கு அறிமுகம் செய்துகொள்!**

டொக்டர் - அப்துல்கலாம்



# விளையாட்டு செய்திகள்

## சங்காவுக்கு 43 ஆவது பிறந்ததினம்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும் விக்கெட் காப்பாளருமான சங்ககாரா இன்று 27 ஆம் திகதி தனது 43 ஆவது பிறந்தநாளை கொண்டாடுகிறார். அவருக்கு உலகெங்கிலும் உள்ள இரசிகர்கள், மற்றும் கிரிக்கெட் வீரர்கள் சமூகவலைதளத்தின் ஊடாக வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். கிரிக்கெட் உலகில் பல்வேறு சாதனைகளுக்கு சொந்தக்காரான சங்கா, 134 டெஸ்ட் போட்டிகளில் 12,400 ஓட்டங்களையும், 404 ஒருநாள் போட்டிகளில் 14,234 ஓட்டங்களையும், 56 ரி-20 போட்டிகளில் 1,382 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.



## ஐபிஎல்2020: துடுப்பு மட்டையைத் தூக்கி எறிந்ததால் கிறிஸ் கெயிலுக்கு அபராதம்!

நடப்பாண்டிற்கான ஐபிஎல் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில் அன்றைய தினம் இடம்பெற்ற போட்டியில் கிங்ஸ் ஒஜ பஞ்சாப் (Kings XI Punjab) அணியும் ராஜஸ்தான் ரோயல்ஸ் (Rajasthan Royals) அணியும் மோதின. இப் போட்டியில் ராஜஸ்தான் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந் நிலையில் போட்டியின் போது பஞ்சாப் அணி வீரரான கிறிஸ் கெயில்(Chris Gayle) 99 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்ததால் விரக்தியில் துடுப்பு மட்டையை எறிந்தார். இச் சம்பவத்தினையடுத்து விதிமுறைகளை மீறியதாக கிறிஸ் கெயிலுக்கு அந்த போட்டிக்கான சம்பளத்திலிருந்து 10 % அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.



## ஐபிஎல்2020: பஞ்சாப் அணிக்கெதிரான போட்டியில் ராஜஸ்தான் அணி வெற்றி!

நடப்பாண்டிற்கான ஐபிஎல் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில் கிங்ஸ் ஒஜ பஞ்சாப் (Kings XI Punjab) அணிக்கெதிரான போட்டியில் ராஜஸ்தான் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அன்றைய தினம் நடைபெற்ற குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது. இதையடுத்து களமிறங்கிய பஞ்சாப் அணியில், அதிரடியாக ஆடிய கெயில் 8 சிக்சர்கள் மற்றும் 6 பவுண்டரிகள் உட்பட 99 ஓட்டங்களுடன்ஆட்டமிழந்தார்.



20 ஓவர்கள் முடிவில் பஞ்சாப் அணி 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 185 ஓட்டங்களைச் சேர்த்தது.இதையடுத்து, களமிறங்கிய ராஜஸ்தான் அணி வீரர்கள் ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடினர். அதிகபட்சமாக பென்ஸ்டோக்ஸ் 50ஓட்டங்களையும் , சஞ்சு சாம்சன் 48ஓட்டங்களையும் சேர்க்க, 17.3 ஓவரில் ராஜஸ்தான் அணி இலக்கை எட்டியது. இதனால் பிளே ஆப் சுற்றுக்கான வாய்ப்பில் ராஜஸ்தான அணியும் தொடர்ந்து நீடிக்கிறது.

## ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்த கபில்தேவ்!



கடந்தவாரம்நெஞ்சுவலிகாரணமாகவைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டிருந்த இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் கபில்தேவ் சிகிச்சைக்குப் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

இந் நிலையில் தான் நலம் பெற பிரார்த்தனை செய்த ரசிகர்களுக்கு, கபில்தேவ் நன்றி தெரிவிக்கும் வீடியோவை, சுரேஷ் ரெய்னா அன்றைய தினம் தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ளார்.


குறித்த வீடியோவில், ரசிகர்களின் அன்புக்கும்,அக்கறைக்கும் நன்றி எனவும், தனது தலைமையிலான இந்திய அணி உலகக்கோப்பையை வென்றது தொடர்பான படமான, 1983 விரைவில் வெளியாகும் எனவும் கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

## வியன்னா ஓபன் டென்னிஸ் தொடர் : காலிறுதிச் சுற்றில் ஜோகோவிச் அதிர்ச்சித் தோல்வி

வியன்னா ஓபன் (Vienna Open) டென்னிஸ் தொடரின் காலிறுதிப் போட்டியில், டென்னிஸ் உலகின் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச் (Novak Djokovic) அதிர்ச்சி தோல்வியடைந்தார். அன்றைய தினம் இடம்பெற்ற குறித்த போட்டியில் இத்தாலியைச் சேர்ந்த இளம் வீரரான லொரென்சோ சொனெகோவை( Lorenzo Sonego), ஜோகோவிச் எதிர்கொண்டார்.

போட்டியின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய லொரென்சோ, 6-2, 6-1என்ற நேர் செட் கணக்கில் வென்று, ஜோகோவிச்சிற்கு அதிர்ச்சி அளித்தார். மற்றொரு போட்டியில் நடப்பு சம்பியனான டொமினிக் தீமை, ரஷ்யாவின் ஆண்ட்ரே ரூப்லே எதிர்கொண்டார். 7-6, 6-2 என்ற செட் கணக்கில் டொமினிக் தீமை வென்ற ரூப்லே அரையிறுதிக்கு முன்னேறினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# உலக செய்திகள்

## கொவிட்-19 : கடந்த 200 நாட்களில் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்புகள் அடையாளம் காணப்படாத நாடு எது தெரியுமா?

கடந்த 200 நாட்களில் கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்புகள் என்பன அடையாளம் காணப்படாத நாடாக தாய்வான் உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

2 கோடிக்கும் மேல் மக்கள் தொகை கொண்ட ஆசிய நாடான தாய்வானில் கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் 550 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியான நிலையில், 7 பேர் மாத்திரமே பலியாகியிருந்தனர்.

அதன்பிறகு எந்த பாதிப்பும், உயிர் பலியும் நேரிடவில்லை. உலகில் கொரோனாத் தொற்றானது பரவ ஆரம்பித்ததும் வெளிநாட்டினர் வருகைக்கு தடை விதித்ததும், கடந்தகால தொற்று பரவல் படிப்பினைகளை கொண்டு எடுத்த நடவடிக்கைகள் உள்ளிட்டவையுமே இதற்கு காரணமாக கூறப்படுகிறது.



## ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு போர் விமானங்களை விற்க அமெரிக்கா முடிவு!

இஸ்ரேலுடன் ஏற்பட்டுள்ள நட்புறவைத் தொடர்ந்து ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு F-35 ரக விமானங்களை விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்காவின் அதிநவீன போர் விமானமான எஃப் 35 ரக விமானங்களை அரபு நாடுகளுக்கு விற்பனை செய்ய இஸ்ரேல் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தது.

இந் நிலையில் ஐக்கிய அரபு இராச்சியத்துடன் நட்புறவு இருப்பதால் அந்நாட்டுக்கு போர் விமானங்களை விற்க இஸ்ரேல் எதிர்ப்புக் கூறவில்லை. இதையடுத்து குறிப்பிட்ட விமானங்களை விற்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.



## வியட்னாமில் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி 35 பேர் பலி!

வியட்னாமில் வெவ்வேறு பகுதிகளில் ஏற்பட்ட மண் சரிவுகளில் சிக்கி 35 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அந்நாட்டில் அண்மைக்காலமாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக பல்வேறு மாகாணங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பல்வேறு பகுதிகளில் அடுத்தடுத்து மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.



குறிப்பாக டிரா வான் மற்றும் டிராங் லெங் ஆகிய கிராமங்களில் அன்றைய தினம் ஏற்பட்ட மண்சரிவால் ஏராளமான வீடுகள் மண்ணில் புதைந்தன. இதனையடுத்து இடிபாடுகளில் சிக்கி இறந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுவரும் நிலையில் காணமற்போயுள்ள 30க்கும் மேற்பட்டோரை தேடும் பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## படகு தீப்பிடித்து கடலில் மூழ்கியதில் 150 குடியேற்றவாசிகள் பலி

செனெகல் கடற்பகுதியில் அகதிகள் குடியேற்றவாசிகளின் படகொன்று தீப்பிடித்து நீரில் மூழ்கியதில் 150க்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளனர். ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும் முயற்சியில் ஈடுபட்ட குடியேற்றவாசிகளே கடலில் உயிரிழந்துள்ளனர். படகு தீப்பிடித்ததன் காரணமாக இந்த துயரச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தீப்பிடித்த படகில் 200க்கும் அதிகமானவர்கள் காணப்பட்டனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுமார் 60 பேரை மீட்டுள்ளதாக மீட்பு பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். செனெகலின் வடமேற்கு செயின் லூயிஸ் கடற்பகுதியிலிருந்து புறப்பட்ட படகே விபத்தில் சிக்கியுள்ளது ஸ்பெயின் கனரி தீவுவின் மூலமாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல முயன்றவர்களே பலியாகியுள்ளனர். இந்த வருடம் இடம்பெற்ற மிகமோசமான சம்பவம் இது என ஐ.நா தெரிவித்துள்ளது.





## அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில் அதிகரித்து வரும் ஆயுத விற்பனை!

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. இந் நிலையில் அமெரிக்காவில் தற்போது ஆயுத விற்பனை தீவிரம் அடைந்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.



கொரோனா பாதிப்பு காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவைச் சரி செய்யும் வகையில் அமெரிக்கா ஆயுத விற்பனையை மூன்றாம் உலக நாடுகளுக்கு அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. ஆயினும் தேர்தலில் வன்முறைகளைத் தவிர்ப்பதற்காக துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்கள் விற்பனை செய்வதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துருக்கி பூகம்பம்: பலி எண்ணிக்கை 22 ஆக உயர்வு



துருக்கியின் மேற்கு பகுதியிலுள்ள ஏகன் தீவுகளில் 7.0 என்ற ரிச்டர் அளவிலான சக்தி வாய்ந்த பூகம்பமொன்று ஏற்பட்டது. இப் பூகம்பத்தினால் கடற்கரையோரத்திலுள்ள இஸ்மிர் நகரம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. குறிப்பாக அப்பகுதியிலுள்ள 20-க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் இடிந்து முற்றிலும் சேதமடைந்தன. கட்டிட இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியிருக்கலாம் எனவும், முதற்கட்டமாக 14 பேர் உயிரிழந்ததாகவும், 419 பேர் காயம் அடைந்ததாகவும் துருக்கி அரசு தெரிவித்தது.


இந்நிலையில் கட்டிட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22 ஆக உயர்ந்துள்ளதாகவும், 786 பேர் காயமடைந்துள்ளதாக பேரிடர் மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர். நிலநடுக்கத்தால் இஸ்மிர் நகரமே உருக்குலைந்து போயுள்ளது. இந் நிலையில் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களை தேடும் பணியில் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினரும், பொதுமக்களும் ஈடுபட்டு வருகின்றனர். துருக்கியில் இப் பூகம்பத்திற்குப் பின்னர் 196 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டதாகவும் இவற்றில் 4க்கு கூடுதலாக ரிச்டர் அளவு கொண்ட நில அதிர்வுகள் 23 முறை ஏற்பட்டுள்ளன என்றும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# நவீன கால உண்மைகள்












## செவ்இளனீர் (king Coconut)
## (தெம்பிலி)

மிகவும் உயர்தர பானம் ...இனி வரும் காலங்களில் உலக சந்தையில் கேள்வி உள்ள பானமாக இந்த செவ்இளனீர் பானம் தான் இருக்க போகிறது .இப்போது இருந்து செவ்இளனீர் தென்னை மர தோட்டங்களை உருவாக்கி நிலையான வருமானம் பெற ஆயுத்தமாக தயாராயிருங்கள்



சிறுநீரக பாதையை சுத்தப்படுத்துகிறது செரிமான செயல்முறை எளிதாக்குகிறது.
சிறு குழந்தைகளில் அஜீரணம் மற்றும் வயிற்று வலி வீக்கம் போன்ற நிலைமைகளை நீக்குகிறது.
உடலை குளிர்விக்கிறது.
உடல் புதியதாக உணர்கிறது.
இரத்தத்தை சுத்தப்படுத்துகிறது மற்றும் இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது.
கொழுப்பைக் குறைக்கிறது வாந்தியை நீக்குகிறது
ஆற்றலை அதிகரிக்கிறது.
எடை இழப்பை நீக்குகிறது.
நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கித்து புற்றுநோயை உருவாக்கும் அபாயத்தை குறைக்கிறது.
ஊட்டச்சத்து குறைபாட்டிலிருந்து விடுபட உதவுவதால் சிறுநீர் கற்களின் உருவாவதைக் குறைக்கிறது.
வயிற்றில்லுள்ள புழுக்களை தடுக்கும். நோய்கள் மூட்டுவலிக்கு நல்லது
பித்தப்பை நோய்கள் உருவாவதைக் கட்டுப்படுத்துகிறது.
முன்கூட்டிய தலை மயிர் நரைப்பதைக் குறைக்கிறது.
பூங்கசு நோய்கள் மற்றும் பக்ரீரியா எதிராக சக்தியை கொடுக்கும்.
சருமத்தின் மென்மையை பாதுகாக்கிறது.




இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 01.11.2020 அன்று வெளியிடப்பட்டது.